

அமரர்

# கந்தையா புவனேந்திரராசா

அவர்களின்

# சிவ(ரீ) தீப மலர்

09.05.2010

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயங்கள் காணிக்கை

*மூச்சாய், முகவரியாய்*
*முழு நிலவாய், மென்காற்றாய்*
*வாழ்வெல்லாம் நின்று*
*வழிகாட்டி! வழிகாட்டி!!*

*வேராகி விழுதெறிந்து .......*
*விருட்சமென நிழல்பரப்பி*
*ஊற்றாகி ..... உறவுள்ளும்*
*உயிர்ப்பிப்பாய் என்நாளும்.*

*இமயமே! இனியவனே!!*
*ஈடில்லா மனிதமே!!!*
*இதயக் கமலமதை*
*என்றென்றும் புஸ்பிப்போம்!*

*இங்ஙனம்*
***துணைவி, பிள்ளைகள்,***
***உறவினர்கள்.***






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் "



முகை விரித்து வித்தாய்
1959 08 09

வீழ்ந்த விருட்சமாய்
2009 04 21

யாழ்ப்பாணம் நெடுந்தீவை தொல்(பூர்வீக) பிறப்பிடமாகவும், கிளிநொச்சி உருத்திரபுரத்தை வாழ்விடமாகவும் கொண்டு வாழ்ந்தவரான இருமரபும் தூய தனிநாயகமுதலி இராமநாத முதலி வழித்தோன்றலான

# அமரர்
# கந்தையா புவனேந்திரராசா
அவர்கள்

அன்பு தான் இன்பம் அகிலத்தில் பெரிது
என்பு மெய் உள்ளம் எதிலுமே பரப்பி
அன்பனாய் எங்கள் உயிருக்குள் உயிராய்
கருமணி உள்ளும் கடவுளாய் நிற்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் "



மொட்டாகி
விரிந்து
1994
05
03

பூவாகி
கருகி
2009
04
21

## அமரர்

# செல்வி.கணேசலிங்கம் கவியார்த்திகா

( மாணவி - கிளி/மகாவித்தியாலயம் - கிளிநொச்சி )

பூத்துக் குலுங்கிய தோட்டத்து மலரே !
புகழ்ச்சிகள் கூட்டிய ஞானத்து ஒளியே !
சிரித்துச் சிரித்தே சிந்தையுள் இன்பம்
சேர்த்து உறவுகள் சேர்த்த எம் தாயே !
தேனென வார்த்தைகள் சிந்திய தேனே !
தெய்வத்தில் உறவுய்ய பூப்போட்ட பூவே !
வானத்து முழுநிலவே வந்து ஒளி தருவாய்
வாழ் வெல்லாம் எம் உள்ளே வணங்கிடுவோம் அம்மா !

திரு.கந்தையா கணேசலிங்கம் (மேலாளர் விவசாய பண்ணை முருகனூர் வவுனியா) கலாதேவி ஆகியோரின் மகளும் ஜதார்திகா, பிரார்த்தன், நிதார்த்தனின் சகோதரியுமாவார் இவரது இறப்பு 21.04.2009ல் சித்தப்பாவான கந்தையா புவனேந்திரராசா அவர்களோடு நிகழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

**திருச்சிற்றம்பலம்**

## தேவாரம்


பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொள்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உண்ணையல்லால் இனி யாரை நினைக்கேனே

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாரும்வண்ணம்
சித்தம் பல அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற வெம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுஉள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரம் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுதம் கழற
உளறி உமை மணவாளனுக்காய்
பாரும் விசும்பும் அறியும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகிப் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப்பெருமானே


**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPORTS COLOURS AWARDING CEREMONY



# COLOURS NIGHT - 2009

## Department of Sports, Northern Province



### நினைவு கூறுகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றை மணித்துளியில் ஓய்ந்து போன உன்னதம்

*எழுத நினைக்கையில் உன்*
*எழில் வதனமெம் எதிரே விரியுதடா*
*அழுத விழிகளால்*
*தினமுனைத் தேடியெம் நெஞ்சம் எரியுதடா*
*பொழுது ஏனன்று*
*புலர்ந்து எங்களின் பூவினைப் பறித்ததுவோ*
*அழுது புலம்பியும்*
*ஆறாத் துயரினில் ஆழ்த்தி மறைந்ததுவோ?*
*அன்பின் முதல்வனே*
*ஆசைப் புதல்வனே அகிலம் இருளுதடா*
*ஆறாத் துயரினில்*
*துடியாய்த் துடிக்குமெம் விழிகள் பெருகுதடா*
*எங்கும் மங்கிடாப்*
*புன்னகை சூடி உலவிய ஆவனமே*
*பொங்கும் நினைவுகள்*
*எண்ணி எண்ணியெம் இதயம் சுடுகிறதே*
*சிவா சிவா சிவா*
*எப்படி அழைத்தாலும் தெவிட்டாத நாமம்*
*எத்தனை முறை பார்த்தாலும் அலுக்காத வதனம்*
*எது கேட்டாலும் சலிக்காத சுபாவம்*
*எல்லாமும் அந்த ஒற்றை மணித்துளியில்*
*ஓய்ந்துறங்கிப் போயினதோ?*

*சிவா!*
*உதடுகள் நிறைய உன் பெயரை*
*உச்சரித்துப் பார்க்கின்றோம்*
*உயிர் வலிக்க வலிக்க*
*உன் நினைவுகளை மீட்டு கின்றோம்*
*உன் ஒவ்வோர் வார்த்தைகளுக்குந்தான்*
*எத்தனை வலிமை*
*உன் ஒவ்வோர் அசைவுக்கும் தான்*
*எத்தனை அர்த்தம்*

*உன் நடையின் மிடுக்கிலே தான்*
*எத்துணை வீரம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உன் கரிய வதனத்துள் தான்*
*எத்துணை கனிவு*
*ஒன்றா இரண்டா எதை நாம் எழுதிடுவோம்.*
*எதை நினைத்து நாம் உனக்காக அழுதிடுவோம்*

*எங்கள் சிவா!*
*வயிற்றிலே உன்னை வாஞ்சையாய்ச் சுமக்கையிலோ*
*நெஞ்சிலே நீ தவழ்ந்து குறும்புகள் புரிகையிலோ*
*தத்தி நடைபயின்று தித்திக்கச் சரிக்கையிலோ*
*வெள்ளை உடையணிந்து பள்ளிக்குப் போகையிலோ*
*புத்திமான் நீயாகி வித்துவங்கள் புரிகையிலோ*
*விளையாட்டு வீரனென விண்புகழ விளங்கையிலோ*
*மனைவி மக்களொடு மாண்புற நீ வாழ்கையிலோ*

*எள்ளளவும் நாம் எண்ணியிருக்க வில்லையடா*
*பாதி வழியினுன்னைப் பறிகொடுப்போம் என்று*
*எத்தனை வதைகளுக்குள் புதையுண்டு நாம்கிடந்தோம்*
*தொடரும் இடரும் துரத்தி வந்த இடப்பெயர்வும்*
*நாளுக்கொரு இடம்மாறி நாயாய் அலையவைக்க*
*எங்களுக்காய் எத்தனையோ*
*வலிகளை நீ தாங்கிநின்றாய்*
*ஈற்றில் உந்தனையே காற்றாய் கரையவிட்டு*
*கதறியழவும் காலம் பொழுதின்றி*
*காலெடுத்து நடந்து வந்தோம்*
*ஐயநே! ஆற முடியவில்லை*
*அண்ணன் மகளையும் நீ உன்னோடு*
*அணைத்தெடுத்துப் போய்விட்டாய்*
*நினைத்து நினைத்து நாளும் நாம்*
*நிம்மதியைத் தொலைத்தபடி*
*ஆண்டவனை வேண்டுகின்றோம் - உன்*
*ஆத்மாவின் சாந்திக்காய்*

பற்றியெரியும் வயிற்றோடு
**பெற்றோர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபார்த்துக் காத்திருப்பேன்

உம்மோடு வாழ்ந்த வாழ்வை
எழுதிட வார்த்தை இல்லை,
எழுதிட முனையும் இல்லை
இருந்தும்......................
ஓரிரு வரியுள் உம்முள் ஊறிய
பாசத்தையும் பண்பையும்,
புகுத்தியிருக்கின்றேனப்பா!

எழுதும் என் கோலின்
முனையே நீர்தான்
வழியும் விழிநீர்த்துளியும்
நீர்தான்
பிழியும் என்
இதயக் கசிவும் நீர்தான்
எனனுள் வாழும்
உயிரும் நீர்தான்
சிரிக்கும் ஒலியின்
அர்த்தமும் நீர்தான்
நிகழும் யாவிலும்
நிஜமாய் நீர் தான்

வாழ்வின் பிடிமானங்கள் கூட வலுவிழந்து
போகிறது
என் மூச்சே
முகவரியானதால்,

என்மனதின் சிறுக்கல்களில்
உன் உறவுகளுக்கான
உன் உயிர் தியாகமுமே
மீட்டப்படும் - உன்
நினைவுகளுக்கு
நிதம் நிதம் ஒத்தடம்
பூவும் சொல்லிடும்
மடிசார் மங்கையாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் புதுமனத்தம்பதியாய்
மழலைகளோடு மகிழ்ந்த வாழ்வு
வெறும் இருபத்தொரு வருடங்களா?
ஏன் இந்த வேகம் அப்பா!
என்ன செய்வேன் நான் இங்கே...

மரத்துபோன என்
மனதின் மௌன மொழியில்
உயிர்த்து நிற்கிறது
உம் காதல்.................
எம் மனக் கோட்டை எல்லாம்
மழலை கட்காய் நாம்
போட்ட அடித்தளங்கள்
மணல் மேடுகளாய்

"பெறுமையாய் இரும்
காலம் பதில் சொல்லும்"
என்பதால் இன்னும் பொறுமையாய்
இன்று தனிமையில்

உதிரத்தின் உயிர்ப்பில்
பூத்த உணர்வுகளால்
காத்திருந்த காதல்
கலைந்தது எதனால்
டிப்ளோமா படிக்கப்போனது
பிரிந்திருக்க பழகுவதற்கா?

வாசல் வரை வந்து
வழியனுப்பும் போதும்......
நண்பர்க்கு உணவு தந்து
உபசரிக்கும் போது
உன் முகம் சிந்தும் பூரிப்பே
தனித்துவமானது

இருவருமாய் சென்ற
நன்மை தீமையெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தனிமையில் இருக்கும்*
*என்னைப்பார்த்து*
*எக்காளமிடுகிறது*

*அப்பா.....!*
*இழகிய இவள் இதயம்*
*இன்னுமோ உம்மை*
*இழந்ததாய் ஏற்குதில்லை....!*
*கண்களோ கண்ணீர் தேடி*
*காலமெல்லாம் அலைகிறது.*
*மனமோ கல்லாய்*
*உயிரோ மகவுகட்காய்*
*ஊசலாடிக் கொள்கிறது*

*யார்தான் கண்வைத்தார்*
*ஏன் தானோ இவ்வாழ்வு*
*எதுவுமே யானறியேன்*
*ஏது நான் எழுத எதுவுமே இயலவில்லை*
*மீண்டும் வருவீர்*
*வழிமேல் விழியாய்*
*விழி நீர் கசிய*
*வழி பார்த்து.....*

*உன்னவள்*
**சிவாகோணேஸ்**

"நீங்கள் சொல்வது எதுவாயினும் அதில் தூய்மை இருக்க வேண்டும்" **-ஜஸ்டின் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் இழந்து விட்ட நிஜம் என் அப்பா

கலைந்து போன கனவுகளால்
தொலைந்துபோன நிஜங்களால்
நிகழ்ந்த கொடுமைகளால்
வலி மிஞ்சிய என் மனதில்
மறக்க மறுக்கிறது
வந்துவிட்ட துன்பத் தடங்கள்.....!

பிரபஞ்சம் தாண்டியும்
பரந்து கிடக்கிறது
என் வலிகள்..........................!
என் அத்தனை அணுவுமே
கனமாகிப் போனதால்
என் உணர்வுக் குமுறல்களை
கவியாக்கித் தொழுகிறாள்.

21.04.2009 அன்று
10.30 காலை
கலைந்த எம் கனவுகளை
கரிந்திட்ட கொடிய பொழுது.

வலைஞர் மடத்தில் நான்
எம் அத்தனை இன்பமும்
தொலைந்து போனது...................!

எம் எண்ணங்களை எல்லாம்
இறக்கிக் கொண்டது
உம்மை இழந்திட்ட
வலிகள்..........................................!
காணாமல் போனோர் பட்டியலில்
கிடந்த என் கண்ணீர்
கண்டு கொண்டது என்
கண்களை
சுனாமியாய்ப் பெருக்கெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னக்குழி நிரம்பி
வழிந்ததன்று!

அப்பா,
உம்மை இழந்ததால்
அழுது கொள்கிறது
உருத்திரபுர மண்.....................................
உம்மை சுமப்பதால்
எழுந்து கொள்கிறது
வலைஞர் மட மண்.........................!

மகவுகளுக்கான தடையற்ற
சுதந்திரம்
மனையாளை அரவணைக்கும்
உண்மைக் காதல்
பெற்றவர் மீது கொண்ட வெளிக்
காட்டிடா பாசம்
சகோதரரை விட்டுக் கொடுத்திடா
நேசம்
தோழர்கள் மீது கொண்ட உரிமை நட்பு
திரைகளற்ற உண்மைச்
சிரிப்பு

மனம் கரைக்கும் கபடமற்ற பேச்சு
எதையும் மறைக்காத எதார்த்த வெளிப்பாடு
தோல்வி சமமென
ஏற்றிடும் வீரம்
உறவுகள் மீது கொண்ட உண்மை
அன்பு
குழந்தைகளுடனான தோழமை பாசம்
யாவர்க்கும் வலிய உதவிடும் தீரம்

விளையாட்டு கழகத்திற்கான அர்ப்பணிப்பு
இவையாவும் பொதிந்த
இமையந்தையல்லவா
இழந்திருக்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிதடி செய்தோ
குடித்து கும்மாளமடித்தோ
சூதுவாது செய்திடா
மனிதமுள்ள மனிதனை
புனிதமுள்ள புனிதனை
எம் உதிரத்தையல்லவா
புதைத்திருக்கின்றோம்.

இன்று,
உங்களுக்காய் அத்தனை
தமிழ் மை விழிகளும்
பனிந்துக் கொள்கையில்
உங்களால் உருப்பெற்றதால்
பெருமை கொள்கிறோம்..................!

அப்பா,
உங்கள் நெஞ்சு முடி மீது
முகம் புதைந்தழுது தீர்த்திடும்

கவலைகள் யாவும்
தேங்கிக் கொண்டே...........................!
உங்களிடம் சொல்லி

மற்றவர் ஊட்டிட விட
முனைகையிலும்
அன்பான உறவுகள்
எனை அணைக்கையிலும்
உம்மோடு இருந்த அந்த நாள்
ஞாபக நரையாகி
இவள் கரித்த உள்ளத்தில்
மௌன ஒப்பாரி சொல்கிறது.

ஆதரவுக்கென யாவரும் இருந்தும்
ஒவ்வொரு கணமும்
அணைத்தெடுத்து முத்தமிடவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நினைத்ததும் ஓடிவந்து*
*மடிமீதிருந்து கதைபேசவும்*
*அடிக்கடி உம்மை கொஞ்சி மகிழவும்*
*அப்பா நீங்கள் இல்லாத*
*அனாதைகள் தானா.................?!*

*எம் செவிகளின் கதவுகள் திறந்தே கிடக்கிறது*
*உம் இனிய கானத்தை கேட்பதற்காக.........................!*
*அந்த இசையில்*
*எம்மை தூங்க வைக்கும் அந்த இனிய இரவுகள்*
*தான்*
*மீளுமாப்பா............!*

*அப்பா என்று அழைக்கத்*
*துடிக்கிறோம்*
*அன்றைய இனிய நாளை*
*வாழ்ந்திட முனைகிறோம்.*
*யோடியாய் நீங்கள் செல்வதை*
*பார்க்க நினைக்கிறோம்*
*வேப்பமரத்தடியில் அரட்டை அடித்து விட்டு*
*தாமதமாய் வரும் போது*
*திட்ட நினைக்கிறோம்*
*கிடைக்குமாப்பாஅந்த நினைவுகள்?......................*

*எப்படிச் சொல்வேன்*
*நீங்கள் மண்ணுள்*
*சங்கரித்ததை......................!*

*அப்பா,*
*இன்றும் மணத்துகொள்கிறது*
*உங்கள் வியர்வை*
*எப்படித் தாங்குவோம்*
*நீங்கள் இல்லையென்றான்*
*நிஜத்தை...............................!*

*பகலின் வெளிச்ச விலாசத்தை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்து விட்டு முக்காட்டு
இருளின் முகவரியை ஏன் தந்தீர்! ...............?
உங்கள் நினைவுகளை
உங்களோடிருந்த நிஜங்களை
அசைபோட்டு துடிக்கிறோம்
அந்திப் பொழுதுகளில்..............!

காலம் கனிந்து வருகையில்
வாழ்வை வாழும் கணத்திலே
அத்தனை பாசத்தையும் துறந்து
ஈழத்தின் பசளையானதேனோ?!

ஒருவருடம் கடந்தாலும்
ஓராயிரம் வருடம் கடந்தாலும்
கலைந்து விடாத
மறைந்து விடாத
என் கவியின் கருவான
என் நண்பன் அப்பாவின்
நினைவுகள் இவை.........................!
இவள் உள்ளக் கீறல் இது.........!

பேனாவின் முனை கொண்டு
வெண்தாள் மீது
விம்மலுடன் பரிமாறிய
பாச ஓலம் இது .........................!

கண்கிளம்பிய வலித்துளிகளில்
மனம்கனத்த
வேதனைத்தடங்களில்
உரைபட்ட உணர்வுள்ள உளம்
கீறிப்போன வடுவிது.....................!

அப்பா! எப்படி என் கரிக்கும்
கன்னங்களையும் கரிந்த
கனவுகளையும் கரையும்
வாழ்வையும் கழுவிட முடியும்...?

உம்
சிவா மகள்
ரதீசியா.பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் உயிர் வேரே

எங்கள் உயிர் வேராய்
நின்று நிதம் காத்து
உங்கள் உயிர் கொடுத்தீர்
உங்கள் பதம் பணிந்தோம்.

எங்கள் குடும்ப ஆணிவேராயிருந்து
தங்கள் உழைப்பீந்தீர்
அன்பு தனைச் சொரிந்தீர்
அனுதினமும் எமக்குழைத்தீர்

சாதனைகள் பல சமைத்தீர்
சகல திலும் நீர் நிறைந்தீர்
'பா'தனை நாம் உமக்கு
படைத்திடவும் வைத்தீர்



வேதனைகள் பல கடந்தீர்
வேகமென வளர்ந்தீர்
'சா' தனை ஏன் கொடுத்தார்
சாத்தான்கள் உங்களுக்கு

விளையாட்டு வீரனென
வெற்றிபல படைத்தீர்
தளைகள் பல அறுத்து
தனித்துவமாய் நிமிர்ந்து நின்றீர்

இளைஞர்களை வழி நடத்தி
இங்கு புதுயுகம் படைத்தீர்
ஏழை எளியவர்க்கு
என்றும் உதவி நின்றீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவரைத் தினம் பணிந்தீர்
பேணித் தினம் காத்தீர்
உற்றார் உடன் பிறந்தோர்
ஊராரை நேசித்தீர்

கற்றோரைத் தான் மதித்தீர்
கண்ணியமாய் வாழ்ந்திருந்தீர்
நற்பெயரை தான் வளர்த்தீர்
நல்லுழைப்பால் தான் வளர்ந்தீர்



நீதிக்காய் என்றும்
நிமிர்ந்து நின்று பேசியவா
சாதிக்கப் பிறந்த
சகலகலா வல்லவன் நீர்

ஆதிக்க வெறியை அடியோடு வெறுத்தவரே
பாதிக்கப்பட்டவர்க்கு
பரிந்துரைத்து பணிசெய்தீர்

ஊருக்காய் என்றும்
உண்மையுடன் உழைத்தீர்
உம் குடும்பம் மறந்து
ஏன் போனீர் எம் உயிரே!

பேருக்காய் வாழாது
பெரும் பணிகள் ஆற்றிகின்றீர்
பாருள்ளோர் போற்றும்
பண்புடைய மாந்தன் நீர்

பாசம் பொழிந்தீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலிரவாய் எமைக்காத்தீர்
வேசங்கள் அறியாத
எங்கள் உயிர் வேரே!

நேசமுடன் என்றும் எம்
தேசத்தை நீர் வளர்த்தீர்
பேச முடியவில்லை
பேதலித்து வாடுகின்றோம்



பாசத்தை பொழிந்து தினம்
பகிடியுடன் மகிழ்ந்திருந்தீர்
நாசத்தை விதைத்து விட்டார்
நாறியவர் அழிவார்

தேசத்தை அழித்தவர்கள்
தொலைந்தழிந்து போவர்
மாசற்ற எங்கள் மன்னவனே
மீண்டும் நீ பிறப்பாய்.

உயிர் உருகும் உன்பாச உறவுகள்
(சகோதரர்கள்)

"மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவன் ஆகிறானோ அந்த அளவுக்கு அவன் கடுமையான சோதனைகளை கடந்தாக வேண்டும்" சு.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதுள் நீளும் நினைவு
# என் அப்பா

என் கன்னம் இன்று தான்
முதல் முதலில் கண்ணீர் துளிகளை
சந்தித்திருக்கிறது!
ஏனெனில்
இன்று தானே நீங்கள் இல்லையே!

கண்களில் இருந்து
ஒரு துளி சிந்த முன்பே
எனக்கு தேவையானதை செய்து
கண்ணீர் ஆணையிடும்
அப்பா நீங்கள் தான் எங்கே???
அடக்கிடத்தான் முடியவில்லை
நம்பவும் இயலவில்லை இன்னும்!

"கவனமாய் கூட்டிப்போகிறேன்"
என்று நான் சொன்னதும்
"உடனே வருகிறேன்" என்றுவிட்டு
கண்தெரியும் தூரம் வரை
காத்திருந்து வழியனுப்பியதும்
இன்னமும் என்
கண்களில் விம்பமாய்........!

உறவுகளை அழைத்து
வருகிறேன் என்றுவிட்டு
தனிமையில் எம்மை தவிக்கவிட்டு
எங்கு தான் இருக்கிறீர்கள்???
மீண்டும் கிடைப்பீர்களா?
என் அப்பாவாய்

தனியே நான் இருந்தால்
வா வென அழைத்துக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர்கள் போலவே
அளந்திட்ட தெருக்கள் எல்லாம்
எங்கே உன் தோழனென
ஏக்கத்துடன் கேட்கிறதே...............
என்ன பதில் நான் சொல்ல.......?

தம்பி என்பதை தவிர என்
பெயரைக் கூட உங்கள் நா
சொன்னதில்லை
வார்த்தையெடுத்து
வரிக்க முடியா
வல்லவரே உங்களை
எப்படித்தான் மறக்க முடியும்......?

பிரிவின் வலிகளையும்
விரக்தியின் விளிம்பையும்
தனிமை உணர்வையும்
இப்போது தானே உனர முடியுது
இவனால் .....................!

மாலைப் பொழுதுகளிலே
என்னுடன் சேர்ந்தே விளையாடி
என் தனிமையை போக்கிய
என்இனிய தந்தை எங்கே..........?

அம்மா, சகோதரிகள் இருந்தபோதும்
அப்பா எனும் சகோதரன் இல்லா
அனாதைத் தம்பியா நான்..........?
எண்ணப் பரப்பெங்கும்
ஏக்கங்களே எச்சமாய்
துக்கங்களே எமதாய் நீழ்கிறது
எம் வாழ்வு.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இரட்டையர் ஆட்டங்களை*
*இரசித்துப் பார்த்ததுண்டு*
*இரட்டையராய் நாம்*
*முதன் முதல் சம்பியன் எடுத்து*
*தந்ததை மகிழ்வித்ததே*
*அவருக்காய் நாம் செய்தது.*

*பெ[illegible] கடனில் இறுதிக்கடன் கூட செய்ய*
*முடியா பாதகனாக நான் ...................?!*
*நினைக்கவே முடியல்லப்பா......!!!*

*பெரியதோர் சுமையோடும்*
*உணர்வெங்கும் வலியோடும்*
*நடமாடும் உங்கள் மகன்*
*வழி நடத்துவேன் நல்ல முறையில் என்*
*குடும்பத்தை......!*

*சதியாலும் விதியாலும்*
*வீழ்த்தப்பட்ட எம் வாழ்வு உங்கள் அருளால்*
*நிச்சயம் மலரும் ஓர் நாள்!*
*மாறாத நம்பிக்கையோடு*
*பொறுப்புணர்வுடன் என்றுமே உண்மையாய்*
*எதிலுமே நேர்மையாய்*
*எடுத்து வைப்பேன்*
*என் அடிகளை*

*என்றும் உம் மகன்*
**பு.ரதீபன்**

"மற்றவருடைய துன்பத்தில் தோழ்கொடு-
உனது துன்பத்தை உன்னிடமே வைத்திரு"

**-அகிடன் பிரபு-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுகளில் ஊடுருவல்
# என் அப்பா

*மனம் இழைத்து*
*விரல் நனைத்து*
*தடம் பதித்து*
*தனிமையில் தவிக்கவிட்டு*

*ஓலங்களின் நடுவே*
*ஓசையின்றி பயனித்த*
*கடைசி மூச்சே!*
*என் உண்மைச் சிரிப்பே!*
*எங்கு தான் போனீர்?*
*உடல் வலியிலும்*
*விழி நீர் ஒழுக ஒழுக*
*அழுகிறேன்!*
*தாங்கவே முடியுதில்லை!*
*இதோ வருகிறேன் என்று விட்டு*
*ஏன் இன்னும்*
*எம்மிடம் வரவில்லை?!!*

*அப்பா!........*
*கைவலியால் துடித்தபோது*
*என்னை மடியிலே தூங்க வைத்து*
*விழித்திருந்த அந்த விழி இன்னமும்*
*என் விழித்திரை விம்பமாய்....!*

*பிடிக்காமல் இருந்த*
*கணிதம் கூட*

*பிடித்துப் போனது நீங்கள்*
*கற்பித்ததால்.........*

*எம் பள்ளியில்*
*சம்பியன் பெற்று*
*உங்கள் கனவில் சறிதை?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றிய திருப்தியோடு
நகர்கிறது நரக வாழ்வு.......!
இடப்பெயர்வுப் பொழுதிலும்
எம்மைக் காத்திட்ட
பொழுதுகளும்
படிப்பதற்கு நீங்கள் செய்த
அர்ப்பணிப்புகளும்
உங்கள் "சாக்கா"வின்
உணர்வுகளில் உரமாய் ............!
காவியமே காணாத
மனிதன் என் தந்தை
கவியாலோ. வார்த்தையாலோ
வடிக்கப்பட முடியாத உம்மை
எப்படித்தான் எழுதி
முடியும் என்னால்???!

காடு களனி என அலைந்தபோதும்
உணவின்றி வீடின்றி
ஏதிலியாய் ஆக்கிடாமல்
எமக்கென உருகிய
மெழுகு திரியே!
எப்படி இன்று நான்
தீபம் ஏற்றுவது.........?! எம் கண்ணீரால்
உறவுகள் கலங்கக் கூடாது
என்பதற்காகவே
கட்டாயமாய் சிரித்துக்கொள்கிறோம்.
இன்றைய எம் ஒவ்வோர் நகர்வும்
பிடிமானங்கள் அற்றதாய்
வேண்டா வெறுப்பாய்
நகர்ந்து கொள்கிறது
உங்கள் நினைவுகளுடன்.........!
என் வலிகளின்
ஒரு துளியை
உங்களுக்காய் சமர்ப்பிக்கிறேன்.

உங்கள் புத்திரி
பு.ரதீபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவழியா நினைவில் என் அப்பா

*மற்றவருக்காக அல்லாமல்
தன் மனச்சாட்சிக்கு சீழ்ப்படிந்தவர்
என் தந்தை...........................!*

*நேர்மையும் பெருமையும்
சளைத்திடா முயற்சியும்
இவர் வெற்றிக்குப் படிக்கல்.......!
குற்றச்சாட்டுகளை தூக்கியெறிந்து
பொறுமையால் வென்றிட்ட வீரன்
என் அப்பா................!*

*களிப்புடன் வாழ்ந்த வாழ்வில்
கலிகாலம் புகுந்ததால்
தொலைந்து போனது
எம் வாழ்வொளி............................!*

*அப்பா என்றால் அடங்குபவர்
என்பதை அறிந்திருக்கிறேன்.
ஆனால் எம் தந்தைதான்
என் தோழனாய் ..........................!
உருத்திரபுத்தையே
தன் உறவாய் எண்ணிய
கூட்டுறவாளி.............................!*

*கறுப்பு நிலா நீ தான் கலங்குவதேன்!
கானம் இசைக்க சொல்லி
கண்கலங்கிய கவிராயர்..................!
ஆனால் இன்றோ
அனைவருமே கண்கலங்கிப்
போகிறோமேயப்பா!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*டிப்ளோமா முடித்து*
*எப்போ வருவீர்கள்*
*என்று தான் காத்திருப்போம்*
*வருவீர்கள் எனும் நம்பிக்கையோடு*
*ஆனால் இனியோ*
*எங்கு தான் காண்போமப்பா....!*

*மண் மீது கொண்ட*
*பற்றுதல்*
*உங்கள் எளிமையின் எடுத்துக்காட்டு..........................!*

*இதைவிட என்னதான்*
*நான் எழுத..........................!*
*நீங்கள் தான்*
*எமக்கு வேண்டும்!*
*கண்ணீரை காணிக்கையாக்கிட*
*சிறியவர் அல்லவே நீங்கள்!*
*விலை மதிப்பற்றவர்*



*என்றுமே உங்கள் நினைவுடன்*
பு.சங்கீர்த்தனா *(கடைக்குட்டி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயும் எம்மோடு தான் கவின்..........

*கவியின் கரு நீதான் என்பதால்*

*கனக்கிறது எம் இதயம்.......!*

*எல்லோர் மீதும் நீ கொண்ட பாசம்*

*தனித்துவமானது........!*

*உனது பக்திநெறியோ வார்த்தைகளுக்கு*

*அப்பாற்பட்டது..............!*

*சகோதரருக்காய் நீ வாழ்ந்த வாழ்வு*

*புனிதமானது............................!*

*கலக்கலப்பான உன் குரல்மொழி*

*மகத்துவமானது......................!*

*மைகொண்டு தொடுத்திட இயலவில்லை*

*ஏனெனில் வஞ்சகம் அறியா*

*சூது வாது செய்யா துடியாட்டம் கூடிய*

*காவியமான கவியிவள்- உன்*

*உணர்வுகள் என்றும் எம் உணர்வுகளோடு*

என்றும்

சிவா சித்தப்பாகுடும்பம்

" உனக்காக நீ எதைச் செய்து கொள்கிறாயோ,
அது நீ இறக்கும் போது உன்னோடு புதையுறும்-
நீ எதனைப் பிறருக்காகவும், உலகினிற்கும் செய்கிறாயோ
அது உனக்குப் பிறகும் நிலைத்து நிற்கும்"

**-அல்விரட்வைன்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவின் உறவே! உயிரின் உயிரே!!

ஆண்டு ஒன்றானாலும் ஆறாது எம் மனம் மாறாத உங்கள்
நினைவுகள் நிதம் பதறி வாழ்கின்றோம்- உங்கள் நினைவில்
காலமெல்லாம் எம்முடன் கூடிகுலாவி
கலந்திருப்பீர்களென நினைத்திருந்தோம் எம் அன்பு மாமாவே!
எம் ஆசைக் கனவுகள் நிர்மூலமாகியதேன்?

பாசத்தின் பிறப்பிடமானவரே பண்பின் சிகரமானவரே
ஒழுக்கத்தின் உறைவிடமானவரே
கல்வியில் வல்லவரே விளையாட்டின் ஊன்றுகோலே
ஊர் போற்ற உறவுகள் கூட வாழ்ந்த நீங்கள்!
எமை தவிக்க விட்டு போனது தான் ஏனே?

உறவுக்கு உறவானவரே நட்புக்கு நட்பானவரே
உங்கள் நிழல் தேடி நாம் வருவோம்- மாமா
இனி யாரிடம் போவோம் - எம் விதி இதுவா
உங்கள் சிரிப்பொலி கேட்ட வீடெங்கே
உங்கள் குரல் ஓசை கேட்ட கோயில்வீதி எங்கே
உங்கள் தடம் பதித்த விளையாட்டு மைதானம் எங்கே
இவை மறக்குமா எங்கள் நினைவை எம் உறவை சேர்த்து
உங்கள் உறவை பிரித்தீர்களே...............

உங்களை மறப்பதா
உங்களுடன் இணைந்து வந்த அந்த சிறுமியை
மறப்பதா (கவினா)
சித்தப்பா தனிய வென்று சேர்ந்து தான் வந்தாளோ - மாமா
உங்களை என்று காண்போம்
உங்களை எப்படி மறப்போம்
ஐயோ இது தான் எம் தலைவிதியா?

என்றும் உம் மருமக்கள்
சுரேஸ் - பிரியா
ரமேஸ்- வித்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி வரும் நாட்களில்...

*முன்பு நாம் இருவரும் சேர்ந்து நகர்த்திய*
*நாட்களுக்குள் நீ இருந்தாய்.*
*பின்பு நாம் தனித்தே நகர்த்திய நாட்களுக்குள்ளும்*
*நீ இருந்தாய்.*

*நகர்ந்த நாட்களில் எல்லாம்*
*நாம் எனக்குறித்தற்றுக்குள் எல்லாம்*
*நீ இருந்தாய்*
*இனிவரும் நாட்களிலும்*
*நீயே.!..................நீயே..!!.................*



*என்றும் உன் மைத்துனன்*
**த.குமணன்**
*கனடா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண் பிடித்த வேர் உறவே!

"அத்தைமாமா"
எமக்குத் தெரியாதவயதில்
தெரிந்தெடுத்த
உறவு முறை

மென்மைச் சிரிப்பு
மெழுகுருகும்
வாழ்வு முறை
வார்த்தைகள் நோகாத
வார்த்தைகளோ உங்களது

அன்புக்குள் நீங்கள்
அன்புக்குள் நாங்கள்
பாறையினும் மென்வேராய்
படரும் அன்பை பார்த்திருந்தோம்

அடம்பன் கொடி உறவில்
அகமகிழ்ந்து வாழ்தோம்
மண் பிடித்தவேர் உறவில்
மகிழ்ந்தோமே என்றென்றும்

பூமியிலே சொர்க்கமதை
பூப் பூக்க வைத்தீரே
இதய வெளிகளுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர விதை நட்டவரே

அத்தை மாமா!
அத்தையைப் பிரியாத
"காரணப் பெயர்" இதுவா?
அந்த நாள் முதல் (21.04.2009)
சிரிப்பை தொலைத்து
நீர் திரண்ட விழிகளுடன்
கனத்த இதயத்தின்
கதகதப்பில்
காலங்கள் கழிகிறதே!

அத்தை மாமா.......
ஆணி வேர் நீங்கள்
ஊணி மண்ணில் விழுதுகளாகியே
நானிலத்திடை எங்கள் மனங்களில்
நல்ல விருட்சமாய்
வேரூன்றி நிற்கிறீர்!



உங்கள் அன்பு மருமக்கள்
ஓவியா-நித்திலன்
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழி எங்கும் நிழலாய்

*எம் உறவோடு உறவாடிய*
*பணிவோடு பாசத்தை தந்த*
*எம் அருமை பெரியப்பாவே - நாம்*
*செல்லும் வழியெங்கும் நிழலாய் நின்றீர்களே!*
*அன்பின் அரவணைப்பை*
*உங்களிடம் - கண்டோம்.*

*எம் வளர்ச்சிக்கு*
*வழிகாட்டிய பெரியப்பாவே!*
*எம்மை தனிமையில் விட்டு விட்டு*
*எங்கு சென்றீர்கள்*
*இனி நாம் யாருடன்*
*பகிடிகள் செய்வோம்.*
*என்னென்றும் உங்கள் நினைவால்*
*உருகுது எம் மனம்*
*உங்களைப் பிரிந்து தவிக்கின்றோம்*
*இந்தப் பரணியில்*
*ஆண்டுகள் பல கடந்தாலும்*
*மறவோம் எம் நினைவை*

*பெறாமக்கள்*
சி.ஹெலிசிகா, சி.ஹமில்டன்

"இகழ்வதையே பழக்கமாகக் கொண்டால்
அழிவு தான் முடிவு"
-கார்லைல்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுக்கு நீ, உதவிக்கு நீ,
# அன்பிற்கும் நீயே தான்.

2009.04.21 செவ்வாய்க்கிழமை மாலை நாலு மணியளவில் அந்த பேரிடிச் செய்தி எங்கள் காதில் விழுவதற்கா அன்றைய பொழுது விடிந்தது. முதன் நாள் திங்கட்கிழமை காலையில் எனக்கு நேர்ந்த மோட்டார் சயிக்கிள் விபத்தில் மயக்கம் தெளிந்து உடல் உபாதையால் துன்பப்பட்டிருந்த மறு நாள் அந்த கணம் அந்த பொழுது வராமலேயே இருந்திருந்தால் நீ இன்று எங்களுடன் இருந்திருப்பாயே ஐயா. மைத்துனர் குகராசா மூலம் அறிந்த கணம் - அந்த வேளை எனது உடல் உபாதைகள் துன்பங்கள் எல்லாம் அந்த நொடிப்பொழுதில மறைந்து எல்லாம் ஒன்று சேர்ந்து ஐயோ எனக் கதறி அழ வைத்தது. எனக்கு என்ன நடந்தது., ஏன் இந்த துன்பம், ஏன் இந்தப் பேரிடி இந்த எண்ணங்கள் ஒன்று கூடி எம்மை உலுக்கி எடுத்தது. நானும் மாமியும் டோட்டியும், பட்ட வேதனைகள், துன்பங்கள் அழுகை என்பவற்றை இன்றும் கூட அந்தச் செய்தியை சீரணிக்க முடியவில்லையே ஐயா.

உறவுக்கு நீதான். மாமா, மாமி, மச்சி என்று வாய் நிறையக் கூப்பிட்டு உறவுகொண்டாடிய உனது குரலை எப்போ கேட்போம் என்கின்ற எதிர்பார்ப்பு கிலேசம், ஆவல் மனத்தை விட்டு.... சாத்தியமில்லை என்ற போதும் கூட அதனை மறக்க முடியவிலையே ஐயா. இங்கே என்னுடன் எனது இரத்தவுறவுகள் இல்லாத நிலையில் நாம் தனித்து எமக்கு ஆறுதல் கூற யாருமற்று துன்பப்பட்டோம். தொடர்ந்த நாட்களில் யாழில் உள்ள உறவுகளும் நட்புக்களும் ஆறுதல் கூறிச்சென்றார்கள். ஆயினும் அதனால் நாங்கள் அமைதி அடைய முடியவில்லையே. ஒரு வாரம் கடந்த பின்பு தான் உன்னுடன் சேர்ந்து உனது அண்ணாவின் மகள் - எனது அன்புப் பேத்தி அவளும் அகாலமானதை அறிந்து பட்ட துன்பம், துயரம், வேதனை என்பவற்றை எனது வார்த்தைகளால் எழுத முடியவில்லையே ஐயா. 2008 இல் நீ கொழும்பில் பயிற்சிக்காக நின்ற வேளை தொலைபேசி மூலம் மாமா என்று அழைத்த நாட்களை இன்றும் நினைத்துப் பார்கின்றேன். நானும் எனது குடும்பமும் எத்தனை துன்பப்பட்டோம் என்பதுடன் உனது மனைவி பிள்ளைகள், மைத்துனி, மைத்துனர்மார், அம்மா, அப்பா, சகோதரர்கள் பட்டிருக்கும் துன்பத்தை கவலையை வேதனையை எண்ணிப்பார்க்கும் போது எனது நெஞ்சம் பதைபதைத்து வெடித்துவிடும் போல் உள்ளதனை யார் அறிவர். கோணேசும் பிள்ளைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செய்தியை கேட்டு எப்படி பதைபதைத்து துடிதுடித்து துவண்டுபோய் இருப்பார்கள். என்பதை என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லையே ஐயா. உனது அண்ணா உடன்பிறப்பாகிய உன்னையும் தனது அன்புச் செலவத்தினையும் ஒருசேர வாரிக் கொடுத்து நேரில் நின்று அனுபவித்த துன்பத்தை வேதனையை இன்றும் எண்ணிப்பார்க்கின்றேன். அந்த துயரம் வேதனை கற்பனைக்கும் அப்பாற்பட்டது- உனது உறவுகள் நட்புக்கள் அனைவருக்கும் உனது பேரிழப்பு பெரும் வெற்றிடத்தை நிரப்ப முடியாததொன்றாக ஏற்படுத்திவிட்டது.

உனது உறவுகளும் நட்புக்களும் உனது உதவிகள் இன்றி மனம்சோர்ந்து வாடி உன்னையே நினைத்து நிற்பதனைக் காண்கின்றேன். யாருக்கு எந்தச் சந்தர்ப்பத்தில் என்ன உதவி தேவையோ அதே உதவியை அந்த நேரத்தில் தேடிச் சென்று செய்வதற்கு நீ நீயேதான். உனது உறவுகளின் எந்தச் செயற்பாட்டிலும் உனது தடம் இல்லாத நிகழ்வுகளே இல்லை. மனமுவந்து உனது வீட்டு வேலைகள் மாதிரி சகலவற்றையும் செய்து முடிக்கும் ஆற்றல் உனக்கு மட்டுமே உரியதொன்று. உனது உறவுகள் என்ன உனது நட்புக்களின் குடும்ப நிகழ்வுகளிலும் ஏன் பொது வேலைகளிலும் நீ ஆற்றிய உதவி நீ ஆற்றிய சேவை நீ ஆற்றிய ஒத்துழைப்பு முன்னின்று தனித்து முடித்துக் காட்டும் ஆற்றல் - இவையெல்லாம் வேறு யாருக்குமே கை வராத ஒன்று. உடல் அசதி பாராது, கண் துஞ்சாது, பசி நோக்காது மற்றவருக்கு உதவுவது உன் உதிரத்தில் ஊறிய ஒன்று. அதனாற்றலை தன்மையை நாம் ஒவ்வொருவரும் உணர்கின்றோம். சிவா, நீதான் இதைச் செய்ய வேண்டும் என்று கூறினால் போதும். அதனை எத்தனை கஷ்டங்களுக்கு மத்தியிலும் நீ செய்து முடிக்கும் உதவிகளை உனது உறவுகளும் நட்புக்களும் என்றுமே மறந்துவிட மாட்டார்கள். எனது மருமக்களில் உனக்கு மட்டுமே உரித்தான பண்பு இது.

சிவா உனது அன்பைப் பற்றி குறிப்பாக எங்கள் குடும்பத்தில் - உனது அன்பைப் பற்றி கூறுவதற்கு உரிய வார்த்தைகள் இல்லை என்று தான் நான் நினைக்கிறேன். அத்தனை பாசமாக என்றுமே நடந்துகொள்வாய். விருந்தோம்பல் எமது தீவு மண்ணுக்குரிய ஒரு சீரிய பண்பு. அது உன்னுடம் மற்றவர்களை விட அபரிமிதமாக இருந்ததனை என்னால் மட்டும் தான் உணர முடியும். அதனை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உயிர் உணர்தவன் நான். நீ மட்டுமே மாமா மாமா என அன்புடன் அழைப்பது உனது பிள்ளைகள - எனது பேரப்பிள்ளைகள் டோட்டித்தாத்தா என அன்புடன் அழைப்பது - கோணேஸ் என்னை சின்னமாமா என கூப்பிடுவது எல்லாம் நீ காட்டிய வழி - நெறி. உனது வீட்டில் நான் உன்னுடன் தங்கிய நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் இரவுப்பொழுதுகளில் நாம் இருவரும் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள், உனது குடும்ப விடயங்கள் பற்றியும் மனம் விட்டு பேசிய பொழுதுகள், வேளைகள் எல்லாவற்றையும் நினைத்துப் பார்க்கின்றேன். அவை ஒவ்வொன்றும் இன்றும் என் கண் முன் வந்து நிற்கின்றன. எத்தகைய விடயங்களையும் உனது நண்பருடன் எப்படி கலந்துரையாடுவாயோ அதனை விட ஒரு படி மேலே நின்று மாமா என்ற உறவை மறந்து உன் நண்பனாக, தோழனாக எல்லாவற்றையும் என்னுடன் பகிர்ந்து கொண்ட நாட்களை எப்பொழுது நான் திரும்பிப்பார்ப்பேன் ஐயா. உன்னுடன் தங்கிய நாட்களில் மாமாவின் குளிப்பில் இருந்து சாப்பாடு வரை அத்தனை விடயங்களிலும் நீயும் உனது குடும்பமும் எத்தனை அக்கறை காட்டுவீர்கள் - அது எல்லாம் நீ என்மேல் வைத்திருந்த அன்பு - பாசம் அது தான் முழுக்கமுழுக்கக் காரணம். எதிர்பார்ப்பில்லாத தூய அன்பிற்கு முன்பு எதுவும் ஈடில்லை ஐயா. இந்த அன்பு, பாசம் உனது சின்னமாமாவிலும் அவரது குடும்பத்திலும் மட்டுமல்ல உனது சகோதரங்கள் உறவுகள் நட்புக்கள் அத்தனை பேரின் மேலும் நீ காட்டிய அன்பு அளப்பரியது. ஆழமானது. விரிந்து பரந்தது. உன்னுடன் நட்பாகப் பழகிய அத்தனை உள்ளங்களும் இன்று உன்னை நினைத்து மனம் பதை பதைத்து அழுவதனை என்னால் உணர முடிகிறது எப்படி ஐயா இத்தனை பண்புகளும் ஒருசேர உன்னிடம் வந்து சேர்ந்தது. ஏன் உன்னை இடைநடுவில் எம்மிடமிருந்து பறித்து நாம் படும் துன்பத்தினை, வேதனையை, துயரத்தை ஆண்டவன் தான் பார்த்து ரசிப்பதற்கா? - உன்னை பண்பாளனாக படைத்து உடன் பறித்துக் கொண்டான். ஐயா நான் படும் வேதனையை துன்பத்தை அனுபவிக்கும் ஒவ்வொரு நொடிப்பொழுதும் உனது அன்பான குடும்பம் படும் துன்பத்தை துயரத்தை வேதனையை ஒப்பிட்டு நோக்கும் போதும் மனம் பதைபதைப்பதனை உணர்கின்றேன். உனது அன்பான செயற்பாடுகள் அத்தனையும் ஒன்று திரண்டு உன் குடும்பத்தினை வழிநடத்தும் என்ற அசையாத நம்பிக்கை. அதற்காக எல்லாம் வல்ல அருட்பேராற்றலை இறைஞ்சி நிற்கின்றேன்.

உனது ஆத்மா சாந்திக்காகவும், நீயே ஆத்மார்தமாக உடனின்று உனது குடும்பத்தினரை வழிநடாத்தவும் அவர்கள் சீரும் சிறப்பும் பெற்று நல் வாழ்வு வாழவும் என்றென்றும் பிரார்த்திக்கும்

உன் சின்னமாமாவும், குடும்பத்தினரும்
திருநெல்வேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈர விழிகளுடன் இவன் நினைவில்

*இப்பூமியின் அடிவயிற்றில்*
*பிறந்த மானுடர்கள் கோடி*
*மனிதத்தை வென்று முடித்து*
*வெளியேறி வந்தவர்கள்*
*உயர் மனங்களின் உறைவிடங்களாவர்*

*இவர் நாமத்தை*
*வரியெடுத்து வார்த்தைகளாய் உச்சரிக்க*
*எனக்கு நாவில் பலமில்லை*
*நற்பெயர் சாவதில்லை*
*என்றென்றும் தன் ஊர்*
*இவன் பெயர் சொல்லும்*
*வாழ்ந்த கால வரலாற்றில்*
*முத்திரை பதித்த உத்தமர் வரிசையில்*
*இவனும் இணைகின்றான்*
*ஊரின் மதிப்பும்*
*உயர் பண்பும்*
*சுறுசுறுப்பும் சுற்றத்தார் உறவும்*
*இவனின் அடையாளங்கள்*

*விளையாட்டு இவன் கலை*
*கழக வெற்றிக்காய்*
*கண்விழித்துழைத்த கடின பற்றாளன்*
*கிளி/ மாட்ட வெற்றிக்காய்*
*கால்பதித்து இவன் படைத்த*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனைகள் அழியவில்லை
உதைபந்தில் அன்றய கணங்களில்
ஆடிய களங்களில்
இவன் பெயர் ஓங்கி ஒலிக்கும்
தேசத்தின் நற்பெயர் கொண்ட
நடுநிலையாளன்
உதைபந்து மத்தியஸ்த வரிசையில்
இவன் முதலிடம் எம் தேசத்தில் சிறந்த
பயிற்சியாளன்
சிரித்துப் பழகும் நல்ல நண்பனிவன்

இனிய நற்குடும்ப
நல்லதோர் தந்தையாய்
சிறகடித்த உறவுகளின்
சிரிப்பொலிக்குள் வாழ்ந்து
சிறகொடிந்து தவிக்கும்
குடும்பத்தார் மத்தியில்
குந்தியிருந்து குமுறியழ முடியாத
உறவுகளாய் இங்கு நாம்
இழக்க முடியாத உறவுகளை
இழந்தவராய்
இடிவிழுந்த நினைவோடு
ஈர விழிகளுடன்
நெஞ்சகலா நினைவுகளுடன்

வேந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவில் புவனேந்திரராசா

விளையாட்டு அலுவலராக நான் சேவையாற்றிய காலத்திலிருந்து விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளராக நான் சேவையாற்றிக்கொண்டிருக்கும் இந்நாள் வரையில் ஒரு சிறந்த உதைபந்தாட்ட வீரனாக, அசாங்க சேவையில் கடமை வீரனாக , குடும்பத்தில் சிறந்த தலைவனாக, பாசமிக தந்தையாக, விளையாட்டுத்துறையில் தலை சிறந்த அதிகாரியாக அவனின் பரிணாம வளர்ச்சியை கண்டு கொண்டவன் நான் அந்தவகையில் எனது திணைக்கள அலுவலர் என்ற ரீதியில் சிவாவின் நினைவு மலரில் எனது நினைவுகளையும் காணிக்கையாக்குகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க உதைபந்தாட்ட வீரர்களினுள் சிவாவின் பெயரும் அடங்கும் அவனது அணியினை கட்டுக்கோப்பாக வைத்திருந்து வெற்றியை நோக்கி செல்ல வைக்கும் அவனது வியூகம் என்னையும் கூட பிரமிக்க வைக்கும் அதலால் சில சந்தர்ப்பங்களில் அவனிடமே அந்த மாவட்ட அணியினை ஒப்படைத்த நிகழ்வுகளும் உண்டு. கிளிநொச்சி பிரதேச சபையில் சேவையாற்றிக்கொண்டிருக்கும் காலங்களிலும் கூட விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பொது நிகழ்வுகள் ஆகியவற்றில் கலந்து கொண்டு மாவட்டத்தின் வளர்ச்சிக்கு அரும் பங்காற்றினார்.

பிரதேச சபையில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் போது விளையாட்டின் பயனுள்ள ஈர்ப்பினால் அப்பதவியை துறந்து சேவைக்காலத்திணையும் துறந்து புதிதாக விளையாட்டு அதிகாரியாக சேவையில் அமர்ந்தார்.

அவரின் நியமனத்திற்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் அடைந்தது என்றால் அதனை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

தன்னோடு சேவையாற்றும் அலுவலர்கள் மேலதிகாரிகள் ஆகியவர்களோடு இனிமையாக பேசி அனைவரினதும் அன்புக்கு பாத்திரமானவர் விளையாட்டுப் போட்டிகளின் போது ஏற்படும் நுட்பமான சூட்சுமமான சிக்கல்களையும் பிணக்குகளையும் இலகுவில் தீர்த்து வைப்பதில் சிவாவின் ஆளுமை நன்கு புலப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கொழும்பு விளையாட்டு விஞ்ஞான துறை நிறுவனத்தில் விளையாட்டுத்துறை டிப்புளோமா பயிற்சி பெற்று இறுதிப்பரீட்சையில் சித்தியடையந்த சிவாவிற்கு அவரது பரீட்சை முடிவுகளை அவர் பார்ப்பதற்கு முன்னரே அகாலமரணத்தை தழுவியது எண்ணையும் என் சக உத்தியோகத்தர்களையும் கதிகலங்க வைத்து விட்டது. இன்று எனது அலுவலகத்தில் சிவாவின் தனிப்பட்ட கோப்பு அவன் வருகைக்காக காத்திருக்கிறது!!!*

*சிவாவின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கின்றேன்.*

*ஓம் சாந்தி*

*சி.அண்ணாதுரை*
*பணிப்பாளர்*
*விளையாட்டுத்திணைக்களம்*
*வடமாகாணம்.*

"அன்னசத்திரம் ஆயிரம வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல் அன்னயாவிலும்
புண்ணயம் கோடி அங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"
-பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத மனிதம்

கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக கிளிநொச்சியை வழப்படுத்தி - அம்மண்ணுக்கே உரமாகிப்போனவர்கள் பலர். கிளிநொச்சியின் வழம் பொருந்திய மண்ணுக்குள் ஒன்றான சிவவரலாற்று பெருமை மிக்க உருத்திரபுரத்திலே பிறந்து, வாழ்ந்து அந்த மண்ணின் வாசனையோடு இறுதிவரை அங்கேயே வாழ்ந்து - எங்கள் வாழ்வியலின் உரிமைக்காக முள்ளிவாய்க்கால் வரை சென்று தன்னுயிரை ஈந்தவர் அமரர் கந்தையா புவனேந்திரராசா (சிவா அண்ணர்) அவர்கள்.

தனது சிறுவயது முதல் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் ஊடாக விளையாட்டுத்துறையில் தன்னை ஈடுபடுத்தி கிளிநொச்சி மாவட்டலேயே பிரகாசமான விளையாட்டு வீரனாகத் திகழ்ந்தவர் சிவாண்ணர். கிளிநொச்சியில் 400 மீற்றர், 1500 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் மாவட்டத்தில் சிறந்த விளையாட்டு வீரனாக மிளிர்ந்ததோடு கைப்பந்து உதைபந்தாட்டங்களில் சிறப்பாக விளையாடி உதைபந்துக்கான சிறப்புப் பயிற்றுனராக நடுநிலையாளராகவும் திகழ்ந்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபையில் சிலகாலம் பணிபுரிந்து கரைச்சி பிரதேசசபையில் பல காலம் பணியாற்றி அதிலிருந்து மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தராகத் தரமுயந்தவர். கோவில் நிர்வாகங்கள், சனசமூக நிலையங்களில் பௌரவப் பணியாளனாகியதோடு எமது மக்களின் நன்மை தீமைகளில் உடன் நின்று உதவும் ஒரு உத்தமனாகத் திகழ்ந்தார்.

கடந்த ஆண்டு எம்மக்கள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டு ஏதிலிகளாக்கப்பட்ட காலத்தில் அந்தக் கொடுமையான போரில் அப்பாவிகளான சிவா அண்ணரும், அவரின் சகோதரரின் மகள் க.வியாத்திகா கணேசலிங்கமும் கோரமாகக் கொல்லப்பட்ட செய்தி என்றும் எம் மனதை விட்டகலா.

**இவர்களின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகிறோன்.**

**சிவஞானம் சிறிதரன்**
பாரளுமன்ற உறுப்பினர்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீக்கமறா நினைவுகளில்......

எமது பிரதேச செயலகத்தின் மூன்று உத்தியோகத்தர்கள் கடந்த வருடத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் போது அகாலச் சாவடைந்த செய்தியறிந்து அதிர்ச்சியுற்றேன். அவர்களுள் விளையாட்டு உத்தியோகத்தர் திரு.புவனேந்திரராசாவும் ஒருவர்.

அவர் தனது கடைமைக்கு அப்பாற்பட்டு பிரதேச செயலக கடமைகளில் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது. அன்னாரின் பிரிவின்போது அவரின் பிரிவுத்துயரில் நேரில் சென்று அவரது குடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டமையையிட்டு மிகவும் வேதனையடைந்தேன்.

விளையாட்டுக்கழக உறுப்பினர்களுக்கு பயிற்சிகளை வழங்கிய போதும், விளையாட்டு விழாக்களின்போதும் அவரது அன்பான அணுகுமுறை என்னை மிகவும் கவர்ந்த விடயமாகும். மக்களின் பெரும் இடப்பெயர்வின் போது அன்னார் ஆற்றிய சேவைகள் அளப்பரியவை. ஈற்றில் தன் குடும்பத்துடன் இடம்பெயர்ந்து வலைஞர்மடம் பகுதியில் வசித்த இவர் தன் குடும்பத்தை பாதுகாப்பாக வன்னியிலிருந்து கொண்டுவரமுயன்றபோது தனது உயிரையே விடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டமையையிட்டு தாங்கொணா துயரடைந்தேன். அன்னார் பிரதேசத்திற்காக ஆற்றிய சேவையும் இக்கணத்தில் நினைவு கூறுவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றேன்.

பிரதேச செயலர்,<br>
கண்டாவளை பிரதேச செயலகம்<br>
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு சமூகத்தின் அணையா ஒளிவிளக்கு

*கிளிநொச்சி மாவட்டத்தின் விளையாட்டுத்துறையின் "முத்து" அன்புக்குரிய சிவா போராட்டத்தின் உச்சகட்டத்தில் தன் வாழ்வை பறி கொடுத்தான். "சிவா" சிறுபராயத்தில் என் உறவினன் விளையாட்டுத்துறையின் மூலம் நண்பன். அவன் பள்ளிப்பருவத்தில் இருந்து தன் வாழ்வை பறிகொடுக்கும் வரை உதவி செய்பவனான சிநேகமனப்பாங்குடன் பழகுபவனாக விட்டுக் கொடுப்பவனாக தன்னம்பிக்கை உடையவாக குடும்பபற்றுள்ளவனாக பொது வாழ்க்கைக்கு தேவையான சகல நற்குணங்களையும் கொண்டவன் சிவா கிளிநொச்சி மாவட்டம் ஏறத்தாள் 60 வருட ஆயுளைக் கொண்டது. இதில் விளையாட்டுத்துறையில் சாதனைபடைத்த இரு கண்களை நாம் இழந்து விட்டோம் க.புவனேந்திரராசா (சிவா) திரு த.கணேசலிங்கம் (கண்ணான்)*

*சிவா பள்ளிப்பருவத்தில் இருந்து விளையாட்டத்துறையில் சிறந்து விளங்கியவன் பின்பு உருத்திரபுர விளையாட்டு கழகத்தில் அங்கத்துவம் வகித்து இருந்த கால கட்டத்தில் தான் அவனின் விளையாட்டுத்துறையின் வளர்ச்சி கிளிநொச்சி மாவட்டம், வடமாகாணம், தேசிய மட்டத்தில் தெரிய ஆரம்பித்தது சிறந்த கரபந்தாட்ட வீரனாக சிறந்த உதைபந்தாட்ட வீரனாக அத்துடன் மத்திய தூர ஓட்ட வீரன் (800m, 1500m) கிளிநொச்சி மாவட்டத்தில் இவரின் சாதனை 15 வருடங்களுக்கு மேலாகி இருந்ததை யான் அறிவேன். மாவட்டத்தின் முதல் நிலை வீரனாக செயல்பட்டவன் கிளி/ மாவட்ட சார்பாக மாகாணம், தேசிய போட்டிகளில் திறமையை வெளிக்காட்டினர்.*

*பின்பு தொழிலின் நிமித்தம் இ.போ.சயில் சேர்ந்த வேளையில், பல உதைபந்தாட்ட போட்டிகளில் கலந்து கொண்டு சாதனைபடைத்தார் இ.போ.சபையால் நடத்தப்பட்ட தேசிய போட்டியில் கலந்து கொண்டு கிளி/ இ.போ.சபையுக்கு பெருமை சேர்த்தவன்*

*பின்பு கிளிநொச்சி பிரதேச சபையில் கடமையாற்றிய வேளையில் இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தி அடைந்து தனது பணத்தை செலவு செய்து வடக்கு கிழக்கு பல மாவட்டங்களுக்கு சென்று மத்தியஸ்தம் வகித்து சிறந்த மத்தியஸ்தன் என்ற பெருமையை பெற்றவன், "சிவா மத்தியஸ்தம் வகிக்காவிட்டால் நாங்கள் பங்குபற்ற மாட்டோம்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பலகழகங்கள் எனக்கு தொந்தரவு தந்ததையும் நான் அறிவேன்.

சிவா விளையாட்டுத்துறை உத்தியோகத்தராக தெரிவு செய்யப்பட்டட பின்பு தான் அவனின் கனவு நனவாகியது சிறு பராயத்தில் இருந்து அதிக நேரத்தை விளையாட்டுத்துறைக்கு செலவு செய்த அவருக்கு இது தேனாக இனித்தது. இவரது முதல் நியமணம் என்னுடனேயே இக்காலகட்டத்தில் தனது கடமையை சிறந்தமுறையில் ஆற்றியவன், நாங்கள் பலமுறை இருவரும் கடமை நிமித்தம் முரண்பட்டும் உள்ளோம். அந்த வேளைகளில் தனது சகிப்புத்தன்மையுடன் கீழ்படிவுடன் தனது பக்கம் என்னை அனைத்து விடுவான்.

சிவா கிளிநொச்சி மாவட்டஉதைபந்தாட்டச் சங்கம், மெய்வல்லுனர் சங்கம் ஆகியவற்றில் தலைவர்/ பொருளாளர் பதவிகளை வகித்தவன். இந்த காலகட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தால் பல போட்டிகளை ஒழுங்குபடுத்தி நடத்தியதுடன் பல பயிற்சி முகாங்களையும் நடத்தி கிளிநொச்சி மாவட்ட உதைப்பந்தாட்டத்தின் தரத்தை உயர்த்தியவன், கொடுக்கப்படும் வேலையை திறமையுடன் செயல்படுத்தியவன் அத்துடன் கிளி/மெய்வல்லுனர் சங்கத்தால் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பு நட்டுக் குறுக்கோட்டம் போன்றவற்றை திறம்பட நடத்த காரணமாக இருந்தான்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடந்தப்பட்ட பயிற்சியாளர் பரீட்சையில் சித்தி அடைந்து கிளி/மாவட்டத்தில் முதல் பயிற்சியாளர் என்ற பெருமையைப் பெற்றவன் .

அத்து"_ன் விளையாட்டுத் திணைக்களத்தில் நடத்தப்பட்ட விளையாட்டு டிப்ளோமா பரீ.்சையில் சித்தி அடைந்தான் அதன் பெறுபேறை காண்பதற்கு முன்பு அவன் வாழ்வு சரிந்தது.

அவன் என்றும் விளையாட்டுச்சமூகத்துடன் அணையா ஒளி விளக்காகி வாழ்ந்து கொண்டு இருப்பான் என்பது நிஜம் அவன் பிரிவால் துயருறும் குடும்பத்துடன் அழுபவனில் நானும் ஒருவன்

என்றும் உன் நண்பன்
சி.கனகராசா
மாவட்ட விளையாட்டு அலுவலர்
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவா என்னும் மனிதம்

*பொறுமை இவன் முதலீடு*

*பணிவு இவன் புனிதம்*

*மதித்தல் இவன் அலங்காரம்*

*கடமை இவன் ஆத்மா*

*இவன் "சிவா" என்னும் மனிதம்.........*

*சிவா எம்மை விட்டு ஓடி ஒருவருடம் ஆகின்றது. ஆனால் எங்கள் மனதை விட்டு இவனால் ஓடமுடியாது.*

*சிறந்த விளையாட்டு வீரன், ஆற்றலுள்ள மத்தியஸ்தன், கண்ணியமிக்க உத்தியோகத்தன் என்ற ரீதியில் கிளிநொச்சி மக்களினதும் சிவாவை சந்தித்தவர்களினதும் மனதில் பதிந்தவன் அல்ல சிவா. மனிதம் என்ற புனிதனாகவே பதிந்தவன்.*

*1997-1998களில் நான் இடம்பெயர்ந்து ஸ்கந்தபுரத்தில் இருந்த காலத்தில் சிவா எனக்கு அறிமுகமானான். அறிமுகப்படுத்தியவர் என்னுடைய நெருங்கிப் பழகிய ஒரு ஆசிரியர். அவர் அறிமுகப்படுத்தும் போது சிவாவைப்பற்றி சொன்னவை, 'இவர்தான் இங்கு சம்பளம் இல்லாமல் லீவு எடுத்துக் கொண்டு கால்பந்துப் போட்டிகளில் விசில் ஊதும் மனிதன்' இவர் பிரதேசசபையில் வேலை பார்க்கிறார். அனால் விளையாட்டை உயிராய் நேசிக்கிறார்.*

*கைகட்டி, கால்கூட்டி, தலைசரித்து நிற்கும் சிவாவைப்பார்கிறேன். ஒரு ஈர்ப்பு எனக்கு அவன் பால் ஏற்படுகிறது. யாருடனும் எடுத்தவுடன் பழகாத எனக்கு சிவாவின் விடையத்தில் அப்படி இருக்க முடியவில்லை. அன்று தொடங்கிய பழக்கம் மெல்ல மெல்ல வளர்ந்து நெருக்கமாகிவிட்டது. அப்படியிருந்தும் என்னை சிவா 'சேர்' என்ற ஸ்தானத்திலேயே வைத்துப் பழகினான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அவனின் அகால மரணத்தை இனரநெற்றில் பார்த்த பொழுது அதிர்ச்சியடைந்தேன். கடைசியாக அவனையும் அவன் நண்பன் சிவனேசனையும் 2008 புரட்டாதி கடைசியில் கொழும்பில் சந்தித்தேன். அவன் அப்பொழுது விளையாட்டு உத்தியோகத்தருக்கான விசேட பயிற்சி நெறியில் இருந்தான். சந்திக்கும் போது "குடும்ப நிலை என்னவென்பது தெரியாது சேர் நான் கிளிநொச்சி போய் பார்க்க வேண்டும். நாளை வவுனியாவிற்கு போகிறேன்" என்று சொன்னான். அதன் பின் அவனின் மரண அறிவித்தல் தான் எனக்கு கிடைத்தது.*

*சிவாவின குடும்பம் பாசப்பிணைப்பானது. அவனின் மனிதம் அவர்கள் பிள்ளைகளிடத்தும் வேரோடி இருந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது. மனைவி தான் சிவாவின் பொக்கிசம். பிள்ளைகளுக்கு அப்பாதான் எல்லாமே. சிவாவின் இழப்பு சொல்ல முடியாதது. எவர் தேற்றினாலும் ஆறுதல் பட முடியாதது இருந்தும் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும்*

*அன்பின் அண்ணா*

**ம. பத்மநாதன்**

*உடற்கல்வி விரிவுரையாளர் பல்கலைக்கழகம் (முன்னாள்)*

"அன்பு என்பது ஒரு மலரின் மணம்போல
மலரின் மணம் எல்லோருக்கும் பொதுவானது. மலர் தன்
மணத்தை எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ளும்
அதுபோன்றது தான் அன்பு"

-ஜே.கிருஷ்ணமூர்த்தி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் மறக்க வியலாத இளைஞர்

*கிளிநொச்சி மாநகரின் பலவளங்களும், சீரும் சிறப்பும் பெற்ற ஊர் உருத்திரபுரமாகும். உருத்திரபுரத்தில் தன் குடும்பத்தினருடன் இனிதாக வாழ்ந்த திரு கந்தையா புவனேந்திரராசா பண்புகள் மிக்கவும் பழகுவதற்கு இனியவர். எல்லோராலும் சிவா என அழைக்கப்பெற்று மக்கள் மனங்களின் பேரிடங் கொண்டவர்*

*அண்ணர் முதன் முதல் கரைசசிப் பிரதேச சபையில் அலுவலகராக இணைந்து 15.09.1988 தொடக்கம் 1999 ஆண்டும்வரையும் சேவையாற்றினார். அவர் தம் பதவிக்காலத்தில் சபையின் செயற்பாடுகளுக்கு ஆறிய பணி அலப்பரியது. அலுவலர்களுடன் கீழ்ப்டிவாகவும் இனிமையாகவும் அவர் பழகிய பண்புகள் நெஞ்சைவிட்டு அகலாதவை. உயர் அதிகாரிகளுக்கு பணிந்து விசுவாகமாகச் செயற்பட்டவர். மக்கள் சேவையே மகேசன் சேவையாகப் பணிபுரிந்தவர். பின்பு தன் விளையாட்டுத்துறையின் திறமையால் விளையாட்டு உத்தியோகத்தரானார். யான் கரைச்சிப் பிரதேச செயலகத்தில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் அத்துறையில் அவராற்றிய சேவைகளைப் பாராட்டாமல் இருக்க வியலாது அசாதாரண சூழ்நிலை நிலவிய காலத்தில் தன் திணைக்களச் செயற்பாடுகளை அர்ப்பணிப்போடு செயற்படுத்தியவர். எவ்வளவு இடர்களேற்பட்டபோதும் தன் பணியை நிறைவேற்ற வேண்டுமென்ற உறுதியோடு யெற்படும் வேகத்தினையும் மன உணர்வுகளையும் நினைவுகூர்ந்து பார்த்தேன். இத்தகையவருக்கா இந்த அவலநிலை!*

*நியதி ஒன்று உண்டல்லவா?*

*"ஒரு பொல்லாப்புமில்லை"*

*"எப்பவோ முடிந்த காரியம்"*

*யோக சுவாமிகளின் திருவாக்கு அப்பெரியாரது இப்பொன் மொழிகளை நாம் தரிசித்துப்போமாகுல் நிச்சயம் அமைதி பெறலாம்.*

*அன்னாரின் ஆத்மா இறைவன் திருவடியில் அமைதி பெற வாழ்த்துகின்றேன். வணங்குகின்றேன்.*

**பொன்-நித்தியானந்தன்**
*சிறப்பு ஆணையாளர்*
*கரைச்சி பிரதேச சபை*
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத கத்தான மனிதன்

*சிவா! சிவாண்ணை! என எல்லோராலும் நேசிக்கப்பட்ட மனிதன் வன்னியின் பெரு நிலப்பரப்பில் மட்டுமல்ல வடக்கு, கிழக்கில் விளையாட்டு ஆர்வலர்களாலும் கல்வியில் புலத்தினராலும் நன்கு அறியப்பட்ட மனிதன் அன்புக்கும், நட்புக்கும் இலக்கணமானவர் மரியாதைக்குரியவர்.*

*சிவா! சிவாண்ணை! எல்லோரையும் வளைத்துப் போடும் சக்தி கொண்ட பெயர் எல்லோராலும் அடிக்கடி உச்சரிக்கப்படும் மந்திர உச்சாடனம் எங்கெல்லாம் சிவாண்ணையின் பாதங்கள் பதிந்தனவே எங்கெல்லாம் வீரர்கள் வென்றனரோ அவர்கள் எல்லாம் சிவாண்ணையின் பயிற்சியில் மிளிர்ந்தனர்.*

*சிவாண்ணை நடு நிலை தவறாத நடுநிலையாளன், நல் வழிகாட்டி, யாருமே எதிர்பார்க்காத தீர்ப்பு வழங்கும் நீதியாளன், விளையாட்டு விரனாய் இருந்து இன்னும் முறியடிக்கப்பட்டாத சாதனைபுரிந்து விளையாட்டு உத்தியோகத்தராய் தன்னை அடையாளம் காட்டிய மகத்தானவர்.*

*சிவண்ணை! நீங்கள் எங்களோடு இல்லை என்பதனை நம்ப முடியவில்லை, மரணம், இயற்கையானது, தவிர்க்க முடியாதது, ஆனால் செயற்கையாய், இத்தனை விரைவாய் இத்தனை கொடூரமாய் ஏன உங்களிடம் வந்தது. தெரிந்தவர்கள் முகம் தெரியாதவர்கள், ஒன்றாக கூடி விளையாடியவர்கள் உதிரத்து உறவுகள் சேர்ந்து பணிபுரிந்தவர்கள் மாணவர்கள் எனப்பலரைப் பலிகொண்டது போர் ஆனால் நீங்கள் இறந்ததை மட்டும் நம்ப முடியவில்லை ஆனால் நம்பித்தான் ஆக வேண்டும், ஏனெனில் உங்கள் புதைகுழியில் மண்போட்ட ஒரு சிலருள் நானும் ஒருவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிவாண்ணா! காலன் உங்களை மட்டும் அழைத்துப் போக எண்ணம் கொள்ளாது உங்களை என்றும் நேசித்த எங்கள் அன்புக்குறிய மாணவி கவியாத்திகாவையும் சேர்த்து அழைத்து போனானே உங்கள் அண்ணன் கணேஷ் உங்கள் தம்பி குகா இருவரும் உங்கள் புதை குழிக்குள் இறங்கி நின்று தேம்பி ஓலமிட்டு அழுதது இப்போதும் என் இதயத்தை கணக்கச் செய்கிறது.*

*சிவாண்ணா! நீங்கள் இறக்கவில்லை உங்கள் குடும்பத்தினருடனும், உங்கள் உறவினர்களுடனும், நீங்கள் நேசித்தவர்களுடனும், உங்களை நேசித்தவர்களுடனும் இன்றும் என்றும் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள். காலத்தால் அழியாத சிரஞ்சிவி நீங்கள்.*

*ஈடு செய்ய முடியாத உங்கள் இழப்பால் துவண்டு போயிருக்குதம் உங்கள் மனைவி, பிள்ளைகள், உடன் பிறப்புக்கள், உறவுகளுள் நானும் ஒருவனாக இணைந்து நின்று உங்கள் ஆத்மா ஈடேற்றத்திற்காக வேண்டுகிறேன்.*

*"ஒருவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பது முக்கியமல்ல -அவர் எப்படி வாழ்ந்தார் என்பதே முக்கமானது"*

அ.பங்கையற்செல்வன்
அதிபர்
கிளி/ மகாவித்தியாலயம்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பா உன் நினைவுகளோடு.............

உன்னோடு பழகிய அந்த இனிய நாட்களை ஒருதரம் மீட்டிப்பார்க்கிறேன். வயதில் மூத்தவன் ஆனாலும் நீ எனக்கு இனிய தோழன். நமக்குள் ஆயிரமாயிரம் முரண்பாடுகள் வரும் ஆனாலும் இறுதியில் எப்படியோ சமாதானமாகிப் போவோம்.

ஆர்ப்பரித்துவரும் அலைகளையும் அமைதியுறச்செய்யும் பொறுமையின் சின்னம் நீ. விளையாட்டுப்போட்டிகளில் நீ பிரசன்னமாகி இருந்தால் பாதி விளையாட்டுகளை முடித்த மனநிம்மதி. எங்கே போட்டியென்றாலும் சொன்னமாதிரி சரியான நேரத்தில் வந்து நிற்கும் உனது கடமையுணர்வு மற்றவர்களுக்கு முன்மாதிரியானது.

காலத்தின் கோலத்தால் குடும்பத்தினரை விட்டு நெடுந்தொலைவு சென்று டிப்ளோமா பாடநெறியை பயிலவேண்டிய கட்டாயம் இருந்தும் கடமையினின்று தவறக்கூடாதென்ற வைராக்கியத்துடன் பாடநெறியினை பயில வந்த உன் கடமையுணர்வு மெச்சத்தக்கது.

பாடநெறியினை பயிலும் காலத்தில் தான் தாயகத்தில் போர் உக்கிரமடைந்து கொண்டிருந்தது. அவ்வேளைகளில் உனது குடும்பத்தினரை நினைத்து உனது மனது பட்ட பதைபதைப்பு எமக்குத்தான் தெரியும். வீட்டிற்கு போக முடியாது போனால் வரமுடியாது என்ற நிலையுடன் ஒவ்வொரு பாடத்திலும் 1ண்பது வீத வரவு இருத்தல் வேண்டும் என்ற கட்டாயம். பாடநெறிகளுக்கான மணித்தியாலங்களை நீயும் சிவனேசனும் கணக்குப்பண்ணி கிடைக்கின்ற இடைவெளிகளில் வீடுவந்து சென்றவேளைகளில் நீ பட்ட கஸ்டங்கள் சொல்லமுடியாது.

உனது குடும்பத்திற்குரிய கடமைகளை எவ்வாறு தவறாமல் ஈடுபாட்டுடன் செய்தாயோ அதேயளவு ஈடுபாட்டுடன் டிப்ளோமா பாடநெறியினையும் பயின்று அனைவரது பாராட்டினையும் பெற்றாய். சக சிங்கள மாணவர்களுடனும் பகைமையில்லாத நட்புடன் பழகினாய். அவர்கள் உன்னைக் காணாவிடின் "கோபுவா, கோ புவா" என்று தேடுமளவிற்கு அவர்களுடனும் நட்பாய் செயற்பாடுகளில் அனைவருக்கும் வயதில் சிறியவன் நீ தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடநெறி முடிவுற்றகாலப்பகுதியில் வன்னிக்கான அனைத்துப்பாதைகளும் மூடியிருந்த வேளை கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எவ்வாறோ குடும்பத்தினரை பார்க்க உள்ளே சென்றுவிட்டாய் உன்றுமட்டும் அறிந்தேன். அதன்பிறகு நீ இல்லை என்ற செய்தி இடியாய் இறங்கியது.

இந்த செய்தியினை உனது தமையனாரை காணும்வரை நான் நம்பவில்லை. ஏனென்றால் ஒருவருக்கும் தீங்கு நினைக்காத உனக்கு இப்படியொரு முடிவுவரும் என நான் கனவிலும் நம்பவில்லை. எங்காவது உன் உடல் உயிருடன் இருக்கும் என எண்ணியிருந்தேன் ஆனால் என்ன உனது உடல் மட்டும்தான் இழக்கப்பட்டுள்ளதே தவிர உனது உயிர் எம்முடன் தான் வாழ்ந்துகொண்டிருக்கிறது. உனது குடும்பத்தினர் மீது, உறவினர்மீது, அயலவர்மீது, நண்பர்கள்மீது நீ கொண்டிருந்த அளவற்ற பாசம் எவ்வாறானது என்பது எனக்குத் தெரியும் அவர்களின் வடிவிலே நீ இன்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறாய் நண்பா.

என்றும் உன் நினைவுகளுடன்

பா.ஆனந்தராஜ்

(விளையாட்டு உத்தியோகத்தர்,

விளையாட்டுத்திணைக்களம், வடமாகாணம்.)

"உலகை மாற்ற வேண்டும் என்று ஒவ்வொருவரும்
விரும்புகின்றனர் ஆயினும் எவரும் தன்னை
திருத்திக கொள்ள விரும்புதில்லை"

-லியோடசல்ஸ்டாய்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாவின் நினைவு என்றும் இருக்கும்

ஈழம் என்று பண்டைய நாளில் இலங்கை நாட்டின் கல்வியும் செல்வமும் கவின்நூறு கலைகளும் ஒருங்கே அமைந்த வடபால் உள்ள யாழ் குடாநாட்டின் தென்புறமாக நீர் நிலைமலிந்த வன்னிப்பகுதியிற் செந்நெற் விளையும் சீறிய கிராமம் உருத்திரபுராணர் உவப்புடன் அமர்ந்த சோழர் காலத்திற்கு முந்திய காலமாம் பல்லவர் ஆண்ட பழம்பெரு நாடெனச் சாட்சியம் கூறும் சற்சதுர வடிவான ஆவுடையார் கல்லிற்சிவலிங்கம் அமைந்த உருத்திர புரமெனும் உயரிய பெயருடன் செல்வம் கொழிக்கும் மக்கள் வாழ்ந்த அப்பெரும் நாடு காலத்துக்குக் காலம் மலேரியா நோயாலும் அந்நியர் படையின் ஆக்கிரமிப்பாலும் நாடு காடாகியும் காடு நாடாகியும் மாறிமாறித்தானே மிளிர்ந்தது.

ஆவினம் மாவினம் தெங்கு பனைகள் காடுபடு திரவியம் புன்செய் பயிரினம் மக்கள் வாழ்க்கையை மகிழ்வுறச் செய்தன நாகரீகத்தில் நலம் பெற்று விளங்கியது. இறுதியாக இப்பெரு நாட்டை வளமுறச்செய்ய ஆயிரத்துத் தொளாயிறத்து நாட்பத்திதொன்பதில் யாழ் நகர் அமைந்த கிராமங்கள் தோறும் இருந்துமே மக்கள் வந்து குடியேறினர். கல்விச் சாலைகள் கவின்நூறு ஆலயங்கள், விளையாட்டுக் கழகங்கள், நூல்நிலையங்கள் என்பன போன்ற பொது நிறுவனங்கள் எங்கும் மலிந்தன. மக்கள் மகிழ்ந்தனர். எத்தனை மதங்கள் இருந்த போதும் மதபோதமோ, இனபோதமோ இருந்ததில்லை. ஒரே குடும்பம் போல் அனைவரும் இருந்தனர். இத்தகு நாட்டில் இருந்த மக்களிற் கட்டழகு கொண்ட கந்தையா அவர்களுக்கு பொற்புடை மாது பொன்னம்மா அவர்களும் இல்வாழ்வில் இணைந்து இன்பமாய் வாழ்ந்தனர். இறைவழிபாடும் தான தருமமும் இவர்கள் வாழ்வில் இயல்பாய் அமைந்ததால் நாட்டில் உள்ளோரும் நட்பாய் இருந்தனர். ஆண்டவன் அருளால் அவர்தம் பிள்ளைகள் கல்வி அறிவுடன் கலைகள் கற்றுக் கலைஞராய் மிளிர்ந்தனர். எவரும் பாராட்ட இவர்களின் இரண்டாம் புதல்வனாய் உதித்தவர் சிவா என்று எல்லோரும் செல்லமாய் அழைக்கும் அன்புழங்கொண்ட புவனேந்திரராசா என்னும் புன்னகையாளன் ஆவான்.

உருத்திரபுரத்தின் உயர் கல்லூரியாம் மகாவித்தியாலத்திற்கு கல்வி கற்று முன்னணி மாணவரில் ஒருவராய்த் திகழ்ந்து விளையாட்டு தனிலும் வீரனாய் மிளிர்ந்தார். சமூக சேவை, சமய சேவை, கூட்டுறவு முதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வகைச் சேவையிலும் இளைஞரை இணைத்து தனக்கென ஒப்பற்ற தலைமையை ஏற்றார். சிரமதானம் சிறப்பாய் நடைபெற அனைவரின் உதவியும் இலகுவாய் இவருக்குக் கிடைத்தது. உருத்திரபுரத்தின் விளையாட்டுக் கழகமாம் பழம்பெருமைமிக்க கழகத்தின் வளர்ச்சிக்குத் தன்னாலான உதவிகள் புரிந்து அதன் தலைமையை ஏற்றுச் சிறப்புடன் அதனை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றார். பொதுச்சேவை என்பது அவரது உடலின் ஒட்டிப் பிறந்த உறுப்புப் போன்றது. எந்த விளையாட்டிலும் முதன்மையானவர். உதைபந்தாட்டத்தில் அவரது திறமை அணித் தலைமை ஏற்கச் செய்தது. கிளிநொச்சி மாவட்டத்தின் கழகங்கள் அனைத்திலும பங்குகொண்டு கழகப் பெயரை விளங்கச் செய்தார். கழகங்களை இணைத்து மாவட்ட மட்டத்திற் போட்டிகள் நடத்தி பாராட்டும் பெற்றார். உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகியவற்றின் மதியட்சகர் பதிவிக்கான பயிற்சியும் பெற்று அதனையும் செய்தார்.

சிந்தனைத் திறமையும் உடைய சிவா அவர்கள் கரச்சிப் பிரதேசத்தின் விளையாட்டு உத்தியோகத்தராய் நியமணம் பெற்று நீண்ட சேவை செய்யலானார். இலைமறை காயாய் இருந்த வீரர்களை வெளியே கொணர்ந்து பயிற்சிகள் கொடுத்து தன்னைப்பேன்ற பலபயிற்சியாளர்களை நாட்டிலே சிறந்த வீரர்களாக்கிப் பெருமை அடைந்தார். பிரதேச மட்டம், மாவட்ட மட்டம், தேசிய மட்டமென எல்லா மட்டத்திலும் பலரையும் பங்குபற்றச் செய்து வெற்றிபெற்றிட வேகமாய் உழைத்தார். இவர்தம் முயற்சியும் எல்லோரின் அன்பும் இவரது குடும்ப வாழ்வுக்கு அத்திவாரமானது தந்தை முயற்சியும் எல்லோரின் அன்பும் இவரது குடும்ப வாழ்வுக்கு அத்திவாரமானது தந்தை தாயார் உற்றவர், உறவினர் விருப்புக் கிணங்கவே அவரும் சம்மதித்தார். உருத்திரபுரத்தின் வடபால் அமைந்த சக்தி புரத்திற் சிறப்போடு வாழ்ந்த வைத்தியலிங்கம் நாகமுத்து தம்பதியர் மகள் கோல அழகுக் கோணேஸ்வரியை விவாகம் செய்து ஊரில் உள்ளோர் அனைவரின் வாழ்த்துடனே மனைவியாய் ஏற்று மகிழ்ந்திரு நாளில் ரத்சியா, ரதீபன், ரதிபா, சங்கீர்த்தனா என்னும் நான்கு செல்வங்கள் பெற்றுக் கல்வியூட்டிக் கலைகள் பயிற்றிக் கவலைகள் மறந்து வாழ்ந்து வருநாளில் நாட்டில் நடந்த இனவெறி யுத்தம் பேருரு எடுத்து மக்களைக் கலைத்தது. எறிகணை வீச்சும் விமானக் குண்டும் மழைபோற் கனன்றது நாட்டை அழித்தது வழங்கொழித்த வண்மைமிகு நாடு மண்மேடானது மக்களும் ஓடினர். என்ன செய்வது என்றே தெரியாது ஒன்றுமறியா இளம் பிஞ்சுகளுடனே கையிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்ததை எடுத்துக்கொண்டு திரும்பி வருவோம் என்ற நினைப்பில் தன்வீடு நீங்கி அயலவன் வீடு நோக்கி உயிரைக் காக்க என்றே ஓடினர்.

முன்னைய பதவி உயர்வு பெற்று விளையாட்டு அதிகாரியாய் ஆனபோதும் தனது முயற்சியால் எல்லோர் மனதையுழ் தன்பால் ஈர்ந்த பெருமையாளனை வரவேற்று உபசரிக்க மக்கள் இருந்தனர். குண்டும் எறிகணையும் செல்லும் இடமெல்லாம் ஓடஓடத்துரத்தவே ஓடலாயினர். திரும்பி வீடு செல்வது என்றே எண்ணம் இல்லாது போனது. பொருட்களும் மறைந்தன. நேரத்திற்குணவில்லை, நிமிர்ந்து படுக்க பலர் உதவியும் அதனை ஏற்கக் குண்டுவிடவில்லை. பங்கர் வாழ்க்கையே பவுத்திரமானது என்றே எண்ணி அதனுள்ளே இருந்து ஆறுதல் அடைந்தனர். உணவு எடுக்கவும் உதவிகள் பெறவும் அம்மா, அப்பா வெளியே சென்றாலும் அவர்களை நினைத்து குழந்தைகள் அழவும் குழந்தைகளை எண்ணி அவர்கள் நோகவும் அதனுள்ளே இருந்து ஆண்டவனை வேண்டிக் காலம் காழித்தனர். இதுவும் நீண்டு நிலைக்கவில்லை. எனினும் காலன் இவர்களை அங்கும் துரத்தத் தொடங்கினான். காலாறவிடாது ஓடியே வந்து இறுதியாக அரசு அறிவித்த பாதுகாப்பு எனும் பெயருடையக் கொலைக் களமான வலைஞர் மடத்தில் இருக்கலாயினர். அந்த இடமோ கடற்கரை ஓரம் மணல் நிறைந்த மக்கள் மிக்ககுறைந்த ஒரு சில வீடுகள் மாத்திரம் அங்கிருந்தன. வீட்டைச்சுற்றி அடைத்தவேலியில் பூவரசு மரமும் கிழுவைத் தடியும் கிடுகு வேலியும் இடையிடை காணலாம். அந்த அடைப்புக்குள் தென்னை மரமும் வேப்ப மரங்களும் மிகக்குறைவாய்த் தெரியும். அனேக கிணறுகள் உப்புநீர் கொண்டவை. நல்லநீர்க் கிணறுகள் தூரத்தில் இருக்கும் இவர்கள் தொழிலோ மீன்பிடித் தொழிலாம்.

அரசசார்பற்ற நிறுவனம் வழங்கிய கூரை விரிப்புகள் கொண்டாக்கிய கூடாரத்துட் பலர் இருந்தனர். அவை ஒன்றோடொன்று ஒட்டி இருந்தன. குறுகிய நிலப்பரப்புள் பல லட்சம் மக்கள் பங்கர் அமைத்துப் பதுங்கியே வாழ்ந்தனர். குண்டு மழையும் எறிகணை வீச்சும் துவக்குச் சூடும் மலிந்த தேசத்தில் அரசும் தன்னிடம் வந்து சேருங்கள் பாதுகாப்புத் தருவோம் என்று கோரிக்கை விடுத்தது. தினம் தினம் குண்டுகள் வீச்சில் பல நூறு மக்கள் இறந்தனர். அத்துடன் காயப்பட்டு வைத்தியம் இன்றிக் காணப்பட்டனர். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கமும் இடையிற் தனது சேவையை நிறுத்திக் கொண்டது. இந்த நிலையில் தான் இறந்தாலும் இளஞ் சிறார்களை எப்படியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்ற வேண்டி மனைவி, பிள்ளைகளை அரசின் பக்கம் அழைத்துச் சென்ற போது அவரின் மனமோ இருதலைக் கொள்ளி எறும்புபோல் ஆனாது. ஆகவே திரும்பி உறவினரை அழைக்க என்றே எண்ணித் திரும்பினார். உள்ளே செல்ல முற்பட்ட வேளையில் காத்திருந்த எறிகணை .·. காலன்.·. குண்டாய் வந்துமே அவரது உயிரைக் கவர்ந்து சென்றான். சிவாவின் உடலோ உறவினர் பக்கத்தில் மனைவி, மக்களோ படையினர் கையில். நடந்தது அவர்கட்கு உடனே தெரியாது. சில நாட்களின் பின் தான் தெரிந்தது இருபக்கத்திலும் ஒரே அழுகை. யார்தான் தேற்றுவார் செய்வதறியாது திகைத்து உறவினர்க்கறிவித்து உள்ளம் குமுறினர்.

நேற்றிருந்தான் இன்றில்லை என்னும் பெருமைமிக்க உலகு தன்னில் அனைவரும் மனதைக்கல்லாக்கி அவர் தம் ஆத்மா சாந்தி பெறுகவென இறைவனை வேண்டி அவரைத் துதித்து அமைதி அடைந்தனர். உள்ளம் அழுதது. இறைவன் கொடுத்த இனிய வரமாம் மறத்தல் என்னும் மனநிலை இல்லையேல் உலகில் உள்ளோர் அனைவரும் என்றும் அழுது கொண்டே இருப்பது திண்ணம். மக்கள் தொண்டனாய் மதிப்போடு வாழ்ந்த தம்பி சிவாவின் நினைவு என்றும் எம்மோடிருக்கும். உடல்தான் மறைந்தது. அவரது உள்ளம் கல்மேல் எழுத்துப்போல் அழியாதிருக்கும். அவர் தம் பெற்றோர், மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர் மற்றுளோர் அனைவரும் அடைந்த துயரில் நாமும் பங்கேற்று அன்புத்தம்பியை என்றுமே நினைத்து அவர் விட்டுச் சென்ற செயல்களை முடிக்கச் சபதம் செய்து ஆறுதல் அடைவோம். "விழிப்பது போலும் பிறப்பு என்றும் உறங்குவது போலும் சாக்காடு" என்ற உண்மையை உணர்ந்து மனதைத்தேற்றி நல்லது செய்வோம். மற்றோரை நேசிப்போம்

நன்றி. வணக்கம்.

அன்பின் அண்ணா
கா.நாகலிங்கம்
முன்னாள் அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "யாரொடு நோவோம் யார்க்கெடுத்துரைப்போம்"

காய்தல் உவத்தல் கடிதல் தழுவுதல்
எல்லாம் வைத்து இறுக்கிப் பூட்டிட

அறுவடைகள் யார் யார் அனுபவித்துப் போனாலும்
விதைகள் விதைப்பதே கடனெனக் கொண்டு
எவர் அடித்தாலும் அடியை மறுக்காமல்

வலிகளை மட்டும் வலிமையாய்த் தாங்கி
அடித்தவர் காயமும் ஆற்றுப்படுத்தி
முப்பது ஆண்டுகள் முனிவராய் வாழ்ந்தோம்.
என்னருமைத தம்பி சிவா!
இப்படியாய்ப போவதற்கா
அப்படி நாம் வாழ்ந்திருந்தோம்?

நீவாழ்ந்து தடம் பதித்த மண் வந்து மீண்டும்
'மந்து' கொத்தத் தொடங்கிவிட்டோம்.
கண்முன்னே மலர்வனங்கள் கருகக் கொடுத்துவிட்டு
மண்வந்து மீண்டும் மலர்விதைகள் நாட்டவுள்ளோம்.
உங்களது வாழ்வுகளை 'அள்ளிக்கொடுத்த' பின்னும்

மறுபடியும் மறுபடியும் மலர்விதைகள் நாட்டவுள்ளோம்.
விதைப்பதுதான் விதியென்று வெற்றுரைகள் சொல்வோமா?
இனியேனும் அறுவடைகள் எமக்கென்று விதைப்போமா?

சி.சண்முகநாதன்
நெடுந்தீவு

"உலகை மாற்ற வேண்டும் என்று
ஒவ்வொருவரும் விரும்புகின்றனர்
ஆயினும் எவரும் தன்னை
திருத்திக் கொள்ள விரும்புவதில்லை"
லியோடசலஸ்டாய்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிவா!.... நீ எங்கே?

நானறிந்த நாள் முதலாய் ஐயா எனவழைத்து
அருகமர்ந்து ஆலோசனை பல கேட்டு ஆறுதலடையும்
சிவா

நன்னீர்ப்புச் சந்தியுடன் புன் சிரிப்பும் சேர்த்து
காண்டோரைக் கவர்ந்திழுக்கும் சிவா

கிராமத்தில் நடக்கும் இன்ப துன்ப நிகழ்வுகளில் கலந்து
மக்கள் மனதில் இடம் பெற்ற சிவா

கால் பந்தாட்டக்கலத்தினிலே முன்னின்று
போலை அடித்து கோல் போடும் காட்சி எங்கே

விளையாட்டுத்துறையினிலே டிப்ளோமா பட்டம் பெற்று
சாதனைகள் பல புரிவாய் என எதிர்பார்த்தோம்

இன்னும் பல பல நனவுகளை எதிர்பார்த்தது எங்களை
விட்டு விட்டு எங்கே சென்றாய் சிவா?

கண்ணீர்த்துளிகளை காணிக்கை யாக்குகின்றோம்
மூல தொன்றும் அறியோம் நண்பா

சி.கதிரவேல்
தலைவர், உருத்திரபுரம்
விளையாட்டுக்கழகம் (முன்னாள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் கிளை விடும் நண்பனின் நினைவுகள்

பல வருடங்களாகத் தொடர்பு எதுவும் இல்லையென்றாலும், ஒரு சூரியனைப் போல மிகப் பிரகாசமாக என் முன்னால் இருக்கின்றது உங்கள் நினைவுகள்.

இந்த நிலம் எங்களுடையது. நானும் நீங்களும் பகலிலும், இரவிலும், குளிரிலும் நடந்த பாலை நிலம்.

ஒரு குருவியைப் போல பறந்து பறந்து நீங்கள் உங்கள் மக்களுக்கு செய்த உதவிகள் ஏராளம்.

வெய்யிலையும், மலையையும், காதலையும் மட்டும் நாம் பேசிக்கொண்டிருக்கவில்லை. எல்லாம் கடந்து, மடக்கி வைக்கப்பட்டிருந்த எமது சிறகுகளை ஒரு நாள் விரிப்போம், இந்த கூண்டுக்கு வெளியே சுதந்திரமாவோம் என்று காத்திருந்தோம்.

எமது விழிகளில் எமது நட்பு இருந்தது. புல்வெளியில் பொழியும் தூறலைப் போல பரந்திருந்தது அன்பு

வாழ்வது எல்லாருக்கும் தெரியும். மரணத்தின திகதி தெரியாது. ஆனால் அங்கு கூடியிருந்தவர்களுக்கு அதுவும் தெரியுமா?

அன்று ஒரு நண்பகலில் எனது நண்பன் வலைஞர் மடம் ஒரு மரத்தடியில் அமைதியாக அமர்ந்திருந்தான். அது ஒரு மோசமான நாள். வேட்டொலிகள் கேட்க, குறிபார்த்து குண்டு வந்து விழக் கொலையுண்டான். கூடவே பெறாமகள்.

எல்லா யுத்தங்களில் பின்னரும்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மேகங்களை மிரண்டு பார்த்துக் கொண்டு பலருக்கு பொய்கள் சொல்ல வேண்டிவரும். அதுவே அவர்களை படுகுழியில் தள்ளிவிடும். ஒரு நாள், அவர்களின் பொய்கள் எல்லாம் அவர்களை கல்லறைக்கு இட்டுச் செல்லும்.*

*நதிகளைப் பற்றி உங்களுக்கு தெரியும். நான் ஒரு நதியைத் தேடிச் செல்லுகின்றேன். நீந்துவதற்காக இல்லை. என் கண்ணீரைக் கரைப்பதற்காக. அது கடலில் சென்று சங்கமிக்கும்*

*மரங்களுக்கும் நம்பிக்கை உண்டு அது தறிக்கப்பட்டால் மீண்டும் துளிர்க்கும். என் நண்பனின் நினைவுகளும் தண்ணீர் பட்டதும் துளிர்க்கும் இளஞ்செடிபோல் எப்போதும் என் நெஞ்சில் கிளை விடும்.*

*இந்த நதி, கடல், நிலம் எல்லாம் என் நண்பனுடையது. அது அவன் குழந்தைகளுடையதும், எங்களுடையதும் கூட*

டிலிப்குமார்

"உன் வாழ்வு மனிதத்தன்மையானதாக
இருக்க வேண்டும் எனில்
சுரண்டல் தன்மையை அகற்ற வேண்டும்"

-மாஜனி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் கனவுகளின் காலங்கள் கனிய

*சிவா அண்ணா நீ மறக்கக்கூடிய மனிதனா*
*என் உறவுக்காரனும் அயல் வீட்டுக்காரனுமாக*
*உருத்திரபுரம் எனும் ஊரில் உறைவிடம் கொண்டோம்*
*அருகினில் மைதானம் அமைந்ததால்*

*சிறுவனாக இருந்த எனக்கு உனது உதைபந்தாட்ட வித்துவத் திறமையால் அதனுள் ஒரு ஈர்ப்பைக் கொடுத்தவன் நீ தான் என்பதால் நினைக்க மனம் வெடிக்கிறது. எனது வழிகாட்டியும் பயிற்றுவித்தவனும் நீயே தான் அந்த வளர்ப்புதான் உன்னுடன் இணைந்து பல ஊர்களில் பல மைதானங்களில் முத்திரை பதித்தோம் வெற்றிப் பூரிப்பில் நாம் கட்டித்தழுவி முத்தமிட்டுக் கொண்ட நாட்கள் இன்னமும் என் நெஞ்சில் நேற்றுப் போலுள்ளது. உருத்திரபுரம் விளையாட்டுக் கழகமென்றால் உன்பெயர் உச்சரிக்காத இடமிராது. ஊரெங்கும் நீ பெற்ற மதிப்பை அளவிடமுடியாது. உன் வழி தொடர்ந்து நானும் ஒரு விளையாட்டு வீரனாக இம்மாவட்டத்தில் மிளிர்ந்தேன் அதுவேதான் என்னையும் ஒரு விளையாட்டு உத்தியோகத்தராக உயரவைத்தது. உனது பதவியுடனேயே இணைந்து கடமையாற்றும் எமது தேசத்தில் நான் அறிந்த வகையில் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் என்றால் உன் பெயர் உச்சரிக்கப்படுவதையே சிறுவயதிலிருந்தே இன்றுவரை நான் கேட்டதுண்டு. உன்னைப் பின்பற்றி உயர்வு பெற முனைந்த இளைய சமுதாயம் பல உண்டு இந்த இளவயதில் உன் இழப்பை தாங்க முடியாத ஒரு ஜீவனாக தூரதேசத்திலிருந்து விம்மி வெடிக்கின்றேன். நீண்ட எம் விடுதலைப்போரினுள் நீயும் வித்தானாய் நீ தவழ்ந்த ஊர் சிறக்கிறது நலமாய் மீள்கிறது என்கையில் நீ கடந்த வீதிகள் உன் வரவின்றி வெறிச்சோடிக்கிடக்குமே பார்க்கப் பொறுக்குமா எம்தேச மக்களின் நெஞ்சங்கள் உன் இழப்பு என்பது உன் குடும்பத்தோடு அடங்கிவிடப் போவதில்லை நீண்ட உறவுக்ள், நண்பர்கள் நிஜமான உன் மனதறிந்த மனிதர்கள் எல்லோருமே நொந்தழும் நினைவுகளாய் நீ மனங்களில் உள்ளாய். மீண்டும் எம் தேசம் திரும்பும் வேளைகளில் உன்முகம் காணத்துடிக்கும் உறவுகளாய் உன் கனவுகளின் காலங்கள் கனிய குடும்பம் அமைதி பெற்று ஆறுதல் பெற ஆண்டவன் என்று எம்முடன்*

க.கலாதரன்
முன்னாள் விளையாட்டு அலுவலர்
கிளி/ பூனகரி
(லண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாண்ணருடன் சில காலங்கள்

மாதங்கள் பல கடந்து விட்டாலும் இன்றும் இனி என்றும் எம்மனதைப் பாதிக்கும் ஓர் நிகழ்வாகவே அமைந்து விட்டது. நடந்து முடிந்த எம் இனத்தின் அழிப்பு. இரு இனங்களின் தலைமைகளின் போட்டியில் சிக்குண்டு மனிதர்களுக்கு உரிய மனிதர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வாழும் உரிமை இரு தரப்பாலுமே மறுக்கப்பட்டு பிரிக்கப்பட்ட உயிர்கள் எத்தனையோ ஆயிரம். இந்த ஆயிரங்களில் ஒன்றாக வலைஞர் மட மண்ணில் புதைக்கப்பட்ட பல மனிதர்களின் நடுவில் தன்னையும் புதைத்துக் கொண்டவர்தான் நண்பர் சிவாவும்.

என்கையை மட்டுமே விட்டுத் தொலைந்துபோன அந்த அழகான நாட்களின் நினைவுகள் இன்றும் என்னுள் பசுமையான நினைவுகளாகவே நிற்கின்றன. முகில் கூட்டங்கள் எதையோ தேடி ஓடியடித்தான் இருக்கும் அதுபோல்தான் நான் கண்ட சிவாவும் வாழிவில் தன் முயற்சியால் முன்னேறிய மனிதன்.

சிவா இவரின் அறிமுகம் எனக்கு 1985ம் ஆண்டில்தான் ஏற்பட்டது கிளிநொச்சி CTB டிப்போவிற்கு முன் இருந்த தேனீர் கடையில் நானும் நில நண்பர்களும் உரையாடிக்கொண்டிருந்த போது எண்ணையும், கொழுப்பும் (Oil and Crease) படிந்த உடையுடன் டிப்போ (Depot) வின் உள்ளிருந்து அந்த மெலிந்த உருவம் என்னை நோக்கி வந்து தன்னை அறிமுகம் செய்து கொண்டது. இப்படித்தான் நாங்கள் அறிமுகப்பட்டுக்கொண்டோம்.

நிண்ட வாய்க்கால் கரையோரம் விரிந்து படுதிருக்கும் அந்த அழகிய வயல்களின் பசுமையின் நடுவில் பூத்திருந்த அழகிய உருத்திரபுரம் என்னும் கிராமமும் அந்தக் கிராமத்தின் பல இளைஞர்களுடனும் பல மக்களுடனும் பழகும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்தவர்களில் அன்ரன் அண்ணரும், சிவாண்ணரும் மறக்கப்பட முடியாதவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பல சொந்தங்களையும் சுற்றங்களையும் இழந்து தான் இன்று புலம் பெயர் மண்ணில் பலர் வாழ்கின்றனர். அதுபோல் நான் இழந்த பலருள் "இல்லை ஒரு பொருளும் இழப்பதற்கு ஆனால் வெல்ல ஒரு உலகே இருக்கின்றது "நல்லதொரு சமத்துவ நெறிதனிலே இங்கு நாளை ஒரு வாழ்க்கை இருக்கிறது" என்று நான் பாடிய போது என்னுடன் உரத்துப் பாடிய ஓர் இனிமையான குரல் இன்று மண்ணுள் அடங்கிப் போய் விட்டாலும் நாளை நாமும் இருக்க மாட்டோம். ஆனாலும் இந்த உலகம் இயங்கிக் கொண்டு தான் இருக்கபோகிறது. புதிது புதிதாக மனிதர்கள் பிறந்து கொண்டு தான் இருப்பார்கள். "மனிதர்கள் தோற்கலாம் ஆனால், மானுடம் தோற்பதில்லை" என்னும் கூற்றுக்கமைய நல்லதொரு சமத்துவநெறி இன்று இல்லாமல் இருக்கலாம். நாளை இவ்வுலகில் தோன்றியே தீரும் என்னும் நம்பிக்கையுடன் உறங்கும் என் நண்பனுக்கு இதய அஞ்சலியையும் அவர் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதலையும் கூறி முடிக்கின்றேன்.*

என்றும் நட்போடு உன் நண்பன்
சங்கர் கணேஸ்

"கற்களால் கட்டப்பட்ட கோவில்களை விட
தசையாலும் நரம்புகளாலும் கட்டப்பட்ட
மனிதமுள்ள மனிதரே உண்மையான கோவில்கள்"
-காந்திஜீ-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் ஆதாரம்

இயலாமல்
கனக்கிறது
இதயம்............................

மூச்சு
முட்டி ...... முட்டி
நொதிக்கிறது
நுரையீரல்

சிந்தையின்
சேமிப்பில்
செலவாகின
ஞாபகங்கள்......

பார்ப்பவை எல்லாம்
பதிவதில்லை
உயிர்வேரில் சில
உறவுகளே பூக்கும்
சிவா...... அண்ணா........
சிவா....... அண்ணா.......

பாசம்
உருவத்திலிருந்தால்
எப்படியிருக்கும்
வடிவமாகவே
வாழ்ந்தவன் நீ

உணர்வுகளை
தொட்டுப்பார்கயிலாது
கிட்டநின்று
வல்லமையாகவே
வலம் வந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உறவுகளுக்காக*
*உருகிய*
*மெழுகாய்.....*
*சிவா... அண்ணா......*
*உயிர் பிரியும் போது*
*என்ன நினைந்தாய்*
*யாரை எண்ணினாய்*
*யாவருக்குமாக*
*யாதுமானவன் நீ யல்லவா?*

*பாசங்களுக்காக - உன்னை*
*பங்கு போட்டுக் கொண்டவனே*
*பாதியில் எம்மை விட்டு*
*ஏன் ....போனாய்.....*

*சிவா..... அண்ணா.....*
*நெஞ்சம்*
*நொருங்கியது*
*கண்ணாடிக் கீலங்களாய்.........*

*பொய்த்துப்போனதே.......*
*நீ........ சொன்னது போலவே.....இந்த*
*உண்மையை..... எப்படி*
*உணர்ந்தாய்........*

*பூ....... இழந்த*
*காம்பாய் கருகிகிறது*
*வாழ்வு...............*
*எப்போதும்*
*எம் செவிகளின்*
*அலைவரிசைகளில்*
*ரீங்காரமாய் - உன்*
*அன்பின் ஆதாரம்................*

என்றும் அன்புடன்
அ.பிரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர்பகிர்கின்றோம்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும்
கடமையாற்றி, அசாதாரண சூழ்நிலையில்
அகாலமரணமடைந்த அலுவலர்களாகிய

திரு.கந்தையா புவனேந்திரராசா - விளையாட்டு அலுவலர்
திரு.இராமலிங்கம் பிரபாகரன் - நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (கிராம அபிவிருத்தி)
திருமதி.இந்திரன் பத்மாவதி - நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (கிராம அபிவிருத்தி)
செல்வி.செல்வநாயகம் சந்திரகலா - முகாமைத்துவ உதவியாளர்
திருமதி.தேவராசா விஜயமாலா - முகாமைத்துவ உதவியாளர்
திருமதி.அபராஜிதன் அஜந்தா - கிராம சேவை அலுவலர்


*ஆகியோரின் அகாலப்பிரிவினால் துயருறும் இவர்களது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அவர்களது ஆத்மாசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

கூடிக்களித்து குதூகலமாய் வாழ்ந்திருந்தோம் - இன்று
வாடித் தவித்துங்கள் வண்ணமுகம் தேடுகின்றோம்.
துரத்திவந்த துயரினுள்ளும் துவளாது பணிபுரிந்தீர் - கொடும்
துயரிலெம்மை ஆழ்த்திவிட்டு தூரதேசம் போய்விட்டீர்
மாவட்ட மக்களுக்காய் மகிழ்வோடு உழைத்தவரே - உம்மை
நெஞ்சுருக நினைந்தபடி உங்கள் பணி தொடர்கின்றோம்.

**அரசாங்க அதிபரும்,**
**அலுவலர்களும்,**
மாவட்டச் செயலகம்,
**கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்




05.04.2010ம் நாள் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்ந்த வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்திய வர்ண இரவு-2009 நிகழ்வில் சிறந்த சேவையாளருக்கான கௌரவிப்பு விருதை துணைவியார் திருமதி. கோணேஸ்வரி புவனேந்திரராசா அவர்களுக்கு ஆளுனரால் வழங்கப்பட்ட அன்பளிப்பின் மாதிரிப் படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.சு.றொகான் ராஜசிங்கம் மாவட்ட விளையாட்டு அதிகாரி
அவர்களுடன் பயிற்சிப்பட்டறை பயிற்றுனர் நண்பர்களுடன்





வன்னி பெருநிலப்பரப்பில் நிகழ்ந்த மெய்வல்லுனர் திறனாய்வின் போதான
விளையாட்டுவிழாவின் தொடக்க நிகழ்வில் கொடியேற்றலின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதைபந்தாட்ட தந்தை மணிவாஸ் பெர்ணாண்டோ முகாமைத்துவ பணிப்பாளர் இலங்கை உதைபந்தாட்ட சங்கம் அவர்களுடன் கிளிநொச்சி உதைபந்தாட்ட சங்கப்பபணிப்பாளர்களுடன் பொருளாளராக



உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தின் வெற்றியின் வெற்றிக் கேடயத்துடன் வீரர்களோடு வீரராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உருத்திரபுரம் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட வீரராக விளையாட்டு வீரர்களுடன்



1995 இல் கிளி/ஸ்கந்தபுரம் பானியல் விளையாட்டு மைதானத்தில் இறுதி உதைபந்தாட்ட கழக வீரருடன் அரச அதிபர் உ.அ.அதிபர் மா.வி. அதிகாரிகளுடன் உதைபந்தாட்ட நடுவராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விளையாட்டு கழகங்களின் வீரர்களுக்கான பயிற்சிகளின்
பயிற்று விப்பாளராக



1996 இடம் பெயர்வின் பின்னாக மீள்கட்டுமான உதவியில் கனடா - உருத்திரபுரம் அபிவிருத்தி கழகத்தின் உருத்திரபுரம் பகுதி உரு/விளையாட்டுக் கழகம் உழவர் உன்றியம் ஆகியவற்றுக்கான விளையாட்டு கற்றல் உதவகள் வழங்கள நிகழ்வுகளின் போது சேவையாளராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் * 09 * 08 * 1959

மறைவு * 21 * 04 * 2009

## திரு. கந்தையா புவனேந்திரராஜா

(விளையாட்டு உத்தியோகத்தர்)

பிரதேச செயலகம், கண்டாவளை, கிளிநொச்சி

புது மாத்தளன் பகுதியில் அகால மரணமடைந்த எமது
திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்தரின்
இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரது
துயரில் நாமும் பங்குகொள்வதோடு இவரது
விண்ணக வாழ்வு அமைதிபெற இறைவனை வேண்டுவோமாக

விளையாட்டுத் திணைக்களம்,
வட. மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



அன்பு நிறை பண்பாளனாய் வாழ்ந்து உறவுகளுக்கு விருட்சமாய் நிழல்தந்து இமயமென உயர்ந்து வளிகாட்டிய பாசமிகு தந்தையின் மரணச் செய்தி அறிந்து உறவுக் குழுமங்களாகி நீண்ட நாட்கள் நினைவுத்துயர் பகிர்ந்தோருக்கும்,

எங்களோடு இணைந்து மீள மீள துயருற்றோருக்கும், உலகின் பல பாகங்களிலிருந்தும் இரத்த உறவுகளோடும், நண்பர்களோடும் துயரில் இணைந்தோருக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அப்பால் அன்பின் துயரைச் சுமந்து தேம்பிநிற்கும் உறவுகளுக்கும் துயரைப் பகிர்ந்து ஆறுதல் கூறியோருக்கும்.

தொலைபேசி, தொலைநகல், தபால், தந்திமூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும். அஞ்சலிப்பிரசுரங்கள் வழங்கியவர்களுக்கும், சென்னையில் ஆறாம்மாத நினைவுநாள் நிகழ்வை நடாத்தி உதவிய உறவினர்கள், நண்பர்கள், குடும்பத்தினருக்கும், உறவினர்களாய், நண்பாகளாய், கழகங்களாய், குழுமங்களாய் உதவி வழங்கிய நேச உறவுகளுக்கும்

விளையாட்டு திணைக்களம்; கல்வி பண்பாட்டு அமைச்சு முதல்வர்கள், அலுவலர்களுக்கும், முதலாம் வருட நினைவு மலருக்கான ஆக்கங்களை வழங்கிய திணைக்கள முதல்வர்கள் வழிகாட்டிகள், நண்பர்கள், உறவினருக்கும் முதலாம் வருட நிகழ்விலே கலந்து கொண்டு உதவியளித்த எம உறவுகளுக்கும் எம் இனியவனின் நினைவுகளோடு இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**கீழ்க் கட்டளை**
**சென்னை**
**09.05.2010**



இங்ஙனம்
**துணைவி, பிள்ளைகள், பெற்றோர், உறவுகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவாவின் நினைவுச் சுவடுகள் ...













வாணி கணினிப் பதிப்பகம் - வவுனியா. தொ.பே: 024 2223658.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org